# அமைதிக் கூலி



“ஸ்ரீ ஞானம்”

[illegible]

# அமைதித் துளி

அருள்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் O. M. I.
(''சிந்தனைத்திரட்டு'' எனும் நூலின் ஆசிரியர்)

அமலி வெளியீடு

முதற்பதிவு ஆவணி 15, 1977

உரிமை ஆக்கியோனுக்கே

விலை 2-50

தொடர்புகள்:

''தீபஞானம்''
அமல உற்பவம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

வஸ்தியன் அச்சகம், யாழ்ப்பாணம்.

# என்னுரை

''உள்ளம் நொறுங்கியவர்களைக் குண மாக்கும்படி என்னை அனுப்பினார்'' இதுவே தெய்வம் எனக்குத் திட்டமிட்டிருந்த பணி யும், அழைப்புமாகும். அதை என்னால் இயன்றளவு ஏற்று அப்பணியை நிறைவேற் றும் ஒரு சிறு முயற்சியே ''அமைதித்துளி'' ஆகும்.

அமைதியற்ற உள்ளம், நிம்மதியற்ற வாழ்வு, திருப்தியற்ற மனம், இலட்சியமற்ற போக்கு — மனிதனை வாட்டிவதைக்கும் கொடிய நோய்களில் சில. இந்த நோய் களைக் குணமாக்கும் நோக்கோடு வெளியா கியது எனது முதல் வெளியீடான ''சிந்தனைத் திரட்டு'' அதன் தொடர்ச்சி யாக வெளிவருகிறது ''அமைதித்துளி''

உள்ளத்திலே புண்பட்டு, அமைதியை இழந்து, தளர்ச்சியுற்று வருந்துவோருக்கு இது புத்துயிரும், புதுநோக்கும் அளிக்கும் என்பது எனது தளரா நம்பிக்கை.

இதை வெளியிடுவதற்குப் பக்கதுணை யாக நின்ற விக்ரர் குரூஸ் அடிகளார்க்கும், அழகிய அட்டைப்படம் வரைந்து உதவிய சித்திரக் கலைஞர் ''ஹீபதி'' அவர்கட்கும், கைப்பிரதி எழுதி உதவிய அ. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

''தீபஞானம்''

# அணிந்துரை

அருட்திரு. விக்ரர் குருஸ் M. A., Ph. D.
மெய்யியல் பேராசிரியர், அம்பிட்டிய தேசிய குருமடம்

உயர்தரமான ஆராய்ச்சிகளை தாய் மொழியில் எழுதி அறியச்செய்வது இக் காலத்தின் சிறப்பம்சமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக 'அமைதித்துளி' வெளிவந்துள்ளது.

இந் நூலாசிரியரான பற்றிக் ஞானப் பிரகாசம் அடிகள் அவர்களை மெய்யியல் கற்றுக்கொடுக்கும் நாட்களிலிருந்து நன்கு அறிவேன். அவரது அறிவாற்றலையும் உயர் தர மெய்யியல் உண்மைகளை அன்றாடவாழ் வின் சூழ்நிலையில் அலசி ஆராயும் திறனையும் அன்றுதொட்டே அவதானித்து வந்தேன்.

அவரது கன்னிப்படைப்பான 'சிந்தனைத் திரட்டு' அவரின் ஆழ்ந்த சிந்தனையின் சுடராக வெளிவந்து மக்களைச் சிந்திக்க வைத்தது குறிப்பிடத்தக்கது.

அவரது 2ம் வெளியீடான அமைதித் துளி, சிந்தனைத்திரட்டின் தொடர்ச்சியாக "நீதியின்றி அமைதியில்லை" என்ற பேருண்மையை உறுதிப்படுத்தும் கருவியாக அமைந்தது பாராட்டத்தக்கது. தெளிவும், சுவையும், ஆழ்ந்த சிந்தனைகளை எழுப்பக்கூடிய சக்தியும், இவர் எழுத்தின் தனிச்சிறப்பாகும்.

இந்நூலை வாசிப்பவர்கள் சிந்தித்து வாழ்வைச் சிறப்பிக்க உந்தப்படுவதோடு சமுதாயத்தையும் உயர்விக்க முன்வருவார்கள் என்பது என் கருத்து.

விக்ரர் குருஸ்

*DEDICATED*

*To*

*Very Rev. Fr. Provincial-*

*Jim Cooke OMI*

*whose encouragement and assistance have brought this little effort of mine to a fulfilment.*

# அமைதித் துளியின் உள்ளே....!


| | | |
|---|---|---|
| அவலத்தில் தோய்ந்த அமைதி | ... | 1 |
| கண்ணீர்க் கடலுள் பன்னீர்ப் புன்னகை | ... | 2 |
| உள்ளத்து அமைதியின் திவலைகள் | ... | 6 |
| அன்றாட வாழ்வின் அமைதி நிலைகள் | ... | 8 |
| அன்றாட வாழ்வின் போலி அமைதி நிலைகள் | ... | 10 |
| உண்மை அமைதியின் அடித்தளம் | ... | 11 |
| அறிவெல்லாம் கடந்த இறையமைதி | ... | 16 |
| உலக வாழ்வு எனக்கு விடுத்த சவால்கள் | ... | 18 |
| ஆகவே நான் தேடுவது ஒரு போலி அமைதியா? | ... | 20 |
| சவால்கள் சரிந்தன | ... | 23 |
| அமைதி என்பது குழப்பமற்ற மனநிலை பிரச்சினைகள் அற்றதல்ல | ... | 25 |
| மணியிருக்கப் பதர் தேடுவதோ? | ... | 27 |
| உய்த்துணர்வு ஓர் புதிய கண்ணோட்டம் | ... | 29 |
| விழிப்புணர்வு அளித்த திருப்பம் | ... | 33 |
| வன்செயல் வழிகள் வீழ்ந்தன | ... | 37 |
| போலி உறவில் புகலிடமா? | ... | 40 |
| துன்பமே உன்னை இருகரம் விரித்து வரவேற்கிறேன்! | | 42 |
| சிரித்தாலும் கண்ணீர் வரும் | ... | 44 |
| கண்ணீருக்காக மனிதன் படைக்கப்பட்டானா? | ... | 45 |
| அரசியல் அமைதி | ... | 48 |
| சமுதாய அமைதி | ... | 52 |
| சமய அமைதி | ... | 56 |
| வாழ விடுவீர்களா | ... | 59 |
| மேகங்களே நீதியைப் பொழிக | ... | 62 |
| நீதியே நீ மறைகிறாயா? | ... | 63 |
| உங்கள் சிந்தனைக்கு | ... | 65 |

# அமைதித் துளி

## அவலத்தில் தோய்ந்த அமைதி

அமைதித் துளிகளைத் தேடித் திரிகின்றான் மனிதன். ஆனால் அவலத்துளிகளும் அவன் வாழ்வில் கலந்து விடுவதுண்டு. இரண்டும் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்து வாழ்வென்னும் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

நேசிக்கவும், நேசிக்கப்படவும் ஏங்குகின்றது மனித இதயம். அதுதான் மனித இதயத்தின் அடிப்படைத் தேவை. அந்தப் பிணைப்பிலே அமைதித்துளியை அனுபவிக்கையில் தன்னை வெறுப்பவர்களும், தான் வெறுப்பவர்களும் அவனது உணர்ச்சி நிலையினுள் புகுந்து அவலத் துளியைக் கலந்து விடுவதுண்டு. ஆனால் இரண்டும் அவனது உணர்ச்சிச் சமநிலைக்கும், வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் இன்றியமையாதனவாகும்.

ஒன்றித்து வாழவும், ஒரு மனப்பட்டிருக்கவும் ஏங்குகிறது மனித உள்ளம். உற்சாகமூட்டி, உதவிக்கரம் கொடுத்து மற்றவர் தன்னை வாழவைக்கும் போதும், தானும் மற்றவரை வாழவைக்கும் போதும் அமைதித் துளியை அனுபவிக்கிறான். ஆனால் தன் வாழ்விற்குக் குறுக்கே நிற்பவர்களும், தான் குறுக்கே நிற்கும் சூழ்நிலைகளும் அவனது

சேவை மனப்பான்மையைக் குலைத்து, அவலத் துளியைக் கலந்து விடுவதுண்டு. ஆனால் இரண்டும் அவனது தளராத சேவை மனப்பான்மைக்கும், மனஉறுதிக்கும் இன்றியமையாதனவாகும்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்பது ஒவ்வொரு மனிதனின் தணியாத ஆசையாகும், நல்வாழ்வு வாழ மற்றவர் தனக்கு அழைப்பு விடும் போதும், மற்றவர் வாழ தானும் அழைப்பு விடும் போதும் அமைதித் துளியை அனுபவிக்கிறான். ஆனால் தன்னை மாண்டு மடியச் சொல்பவர்களும், தானும் மற்றவர்களுக்கு அப்படிச் சொல்ல வேண்டிய சூழ் நிலைகளும் அவனது இலட்சிய வாழ்வில் புகுந்து அவலத் துளியைக் கலந்து விடுவதுண்டு. ஆனால் இரண்டும் அவனது இலட்சிய வாழ்விற்கும் அனை வரின் நல்வாழ்விற்கான அயரா உழைப்பிற்கும் இன்றியமையாதனவாகும். ஆகவே அமைதித் துளி களாலும் அவலத் துளிகளாலும் மனிதனது உணர்ச்சி நிலை, இலட்சிய வாழ்வு, சேவை மனப் பான்மை போன்றன பதப்படுகின்றன.

## கண்ணீர்க் கடலுள் பன்னீர்ப் புன்னகை

மனிதன் நம்பிக்கையும் கனவுகளும் நிறைந்த வன். இறந்த காலமும் எதிர் காலமும் அவனைத் தாங்கிப் பிடிக்கும் இரு கரங்கள். அழகால் ஆச்ச ரியப் படுபவனும், அநீதியால் குமுறி எழுபவனும், அழகையும் ஒழுங்கையும் மேம்படுத்துபவனும் மனி தனே. அமைதியும் அவலமும், சுகமும் துக்கமும், இன்பமும் துன்பமும், சாந்தமும் கோபமும், சிரிப்

பும் கண்ணீரும், அன்பும் வெறுப்பும், அழைப்பும் புறக்கணிப்பும் ஒன்றேடொன்று பின்னிப் பிணைந்து பல துளிகளாக ஊற்றெடுத்து ஆறு போல் ஓடி ஈற்றில் இறைவனேடு சங்கமமாவதுதான் மனித வாழ்வு.

> ''வாழ்வு என்பது தாயின் உதரத்தில் தொடங்குவதுமல்ல, புதைகுழியில் முடிவதுமல்ல. அது நித்திய வாழ்விலே ஒரு கணமாகும்'' என்கிருர் ஒரு அறிஞர்.

மனிதனின் அன்ருட வாழ்வு பல துன்ப துயரங்கள், கவலைகள், சஞ்சலங்கள், பிரச்சினைகள் நிறைந்தன. ஆனுல் அவற்றின் மத்தியிலும் மனித புத்திக்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட எதிர் பாராத அமைதிக் கணங்கள், சாந்த உணர்ச்சி நிலைகள், உயர்ந்த இலட்சியங்கள், தியாக சேவைச் சிந்தனைகள் அவனது உள்ளத்தைத் தொடுவதுண்டு. உள்ளத்தைத் தொட்டு, ஓய்வும் அமைதியும் சாந்தியும் கொடுத்துச் செல்வதுண்டு. அத்தகைய அமைதித் துளிகள் இன்றேல் வாழ்வு முற்ருகவே கசந்து விடும். அவை இடைக்கிடையே மனித உள்ளத்தைத் தொட்டு நனைத்துக் கசிவாக்கி, அவனது வெறுப்புணர்ச்சிகள், மந்த சிந்தனைகள், பிரச்சினைகள் போன்ற தீய சார்புகளோடு போரிட்டுப், புது மெருகூட்டி, வாழ்வை மேலும் வாழ உறுதியளித்துச் செல்வதுண்டு. அவலத் துளிகள் இன்றேல் அமைதித் துளியை அனுபவிக்க முடியாது. அமைதித் துளிகள் மனித உள்ளத்தில் ஊற்றெடுக்க இன்றியமையாதனவையாய் இருப்பன நோய், சாவு, பிரிவு, வறுமை, தனிமை போன்ற அவலத் துளிகளாகும்.

மனித உதடுகளில் தவழும் புன்சிரிப்பில் எவ்வளவு ஆழம் இருக்கிறதோ, அதிலும் பார்க்க கவலையில் சொட்டும் கண்ணீரில் அதிக ஆழம் உண்டு. புன்னகையிலும் புன்சிரிப்பிலும் பார்க்க, கண்ணீரும் கவலையும் தூய்மை அளிக்கும் சக்திகள் என்று கூறலாம்.

அமைதியின்றி முற்றுகவே அல்லல்படும் மானிடன் எவனும் இந்த உலகில் இல்லை. ஆனுல் அந்த அமைதியைக் கண்டு பிடியாத மானிடர் கோடா கோடி. ஆழ்கடலின் நடுவே குமுறியெழும் அலைகள் நடுவிலும், திமிங்கலம் போன்ற பெரிய மீனின வர்க்கத்தின் நடமாட்டத்தின் இடையிலும், சேறும், கல்லும், முள்ளும் நிறைந்த நீரமுக்கத்தின் மத்தியிலும், அழுக்கு நிறைந்த சிற்பியினுள்ளே முத்து அமைதியாக உறங்கிக் கிடக்கின்றது. மனித உள்ளத்தின் அமைதியும் இதே போன்றது தான். வாழ்வின் இறந்தகால எதிர்காலக் கற்பனைக் கவலைகள், உள்ளக் குமுறல்கள், உணர்ச்சி வசமான நிலைகள், கட்டுப்படா ஆசைகள், தேவைகளின் பயங்கள், வெறுப்பின் கொடூரம், தன்னம்பிக்கைத் தளர்ச்சி போன்ற உளவியல், பொருளாதார சமுதாய சரீர நிலைகளின் நடுவே அமைதி அடங்கி இருக்கிறது.

அலை மோதும் மேற்பரப்புக்கு மனிதனின் உணர்ச்சி வசமாகும் நிலையை ஒப்பிடலாம். அதாவது ஆத்திரம், கோபம், வெறுப்பு, பாசம், சந்தேகம் போன்றன. நடமாடும் மீனின வர்க்கத்துக்கு மனிதனின் தீய மன நிலைகளை ஒப்பிடலாம்.

அகங்காரம், தற்பெருமை, ஆணவம், தன்னலம், பொறாமை, தன்னைமட்டும் நீதிமானுக்கல் போன்றன.

கற்பாறையும் சேறும் முள்ளும் உள்ள பகுதிக்கு அவன் கொண்டிருக்கக் கூடாத உளநிலைக்கு ஒப்பிடலாம். அதாவது, அவன் ஏற்க வேண்டிய சில விடயங்களை ஏற்கமறுத்து, கற்பாறையைப் போன்ற இதயக் கடினத்தோடு இருக்கலாம். அன்றேல் நல்லதையும் நாசமாக்கும் சேறாக இருக்கலாம். அன்றேல் நல்லவற்றை தன்னோடு தொடர்பு கொள்ளவிடாது உதறித் தள்ளும் முள்ளாக இருக்கலாம்.

சிற்பியின் மேற்பரப்புக்கு, எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடிய உளவன்மையும், இடம் பெயர்ந்து அசையவேண்டிய கட்டத்தில் அதற்கும் தயாராக இருக்கவேண்டிய மன நிலைக்கு ஒப்பிடலாம். தாக்குதல்கள் ஏற்படும் பொழுது அசைந்து வளைந்து கொடுப்பதும் முக்கியமாகும். அன்றேல் சடுதியான முறிவு தகர்வுகள் ஏற்படக் கூடும்.

சிற்பியினுள்ளே இருக்கும் மென்மையான தசைப் பகுதியை வாகனங்களில் அமைக்கப் பட்டிருக்கும் " அதிர்ச்சித் தாங்கி" (Shock Absorbers or Springs) யோடு ஒப்பிடலாம். பள்ளம் மேடுகள் குன்றுகளால் வாகனம் ஏறி விழும் பொழுது வாகனத்தில் இருப்பவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படா வண்ணம் அவை காக்கின்றன. அவ்வாறே சிற்பி அசைய நேரிட்டால் அல்லது தாக்கங்களுக்கு உட்பட்டால் முத்தானது சிப்பியோடு முட்டி மோதக் கூடும். அவ்வாறு மோதாதவண்ணம் அந்தத் தசைப்

பகுதி காக்கிறது. அவ்வாறே மனிதனும் தனக்கு எதிர்வரும் தாக்குதல்களுக்குத் தன்னை ஆயத்தப் படுத்தி வைத்துக்கொள்ள வேண்டிய உளவியல் சமநிலைக்கு இதை ஒப்பாக்கலாம்.

## உள்ளத்து அமைதியின் நிலைகள்

மனிதன் இவ்வுலகில் வந்துதித்த காலமுதல் இற்றைவரை அவனது உள்ளத்திற்குச் சாந்தி அளிக்கும் அமைதி நிலைகள் ஆராயப்பட்டே வரு கின்றன. பல் வேறு நிலைகளில் ஆராய்ச்சி நடத்திய அறிஞர்கள் ஒரு சில முக்கிய விடயங்களை எடுத் தியம்புகிறார்கள். அவை பின்வருமாறு :

கொடுக்கப்பட்ட சூழ்நிலையோடும், பெற்றுள்ள திறமைகளோடும் ஓரளவு திருப்தியுற்ற மனம்;

கட்டுப்பாட்டாலும், இயற்கையோடு ஒட்டிய அவதானமான நடத்தையாலும் பெறும் நோயற்ற வாழ்வு ;

"தன்னெஞ்சறிய பொய்க்காத" பிளவுபடாத நெஞ்சமும் பிளவுபடாத நாக்கும் கொண்ட மாசற்ற மனச்சான்று ;

கவலைகள், பிரச்சினைகள், எதிர்ப்புக்கள் வந்து நெருக்கும்போது சோர்ந்து தலைமேற் கை வைத்து தயங்கி நிற்காத, எதையும் தாங்கும் இதயம் ;

மனித புத்திக்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட ஒரு இறைத் திட்டத்திலும், இறைப் பிரசன்னத் திலும்,தேவ பராமரிப்பிலும் ஆழ்ந்த நம்பிக்கை;

இயற்கையை எண்ணி வியந்து இயற்கையின் எழிலிலே திளைத்து நிற்கும் மனப்பாங்கு ;

மனித வாழ்வின் இன்பத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக இருக்கும் ஒழுக்க வாழ்வில் இடையறுப் பற்றுதல் ;

சூழ்ச்சி, கபடு, வஞ்சகம் கலவாத உண்மை அறிவு;

பிறரைப் பற்றி எண்ணி, மனம்புழுங்கி அவர்களோடு தம் வாழ்வை ஒப்பிட்டுப் பொருமை கொள்ளாத ஒரு தூயநிலை ;

எடுத்த விடயத்திற்கெல்லாம் கவலை கொண்டு சஞ்சலமடையாத மனநிலை ;

''இன்னு செய்தார்க்கும் அவர் நாண நன்னயம் செய்து விடும்'' மன்னிக்கும் இலட்சியப் போக்கு ;

மனக் கண் முன் எந்நேரமும் நிறுத்தி, அதை அடைய நேரிய முயற்சிக்கோர் உயர்ந்த இலட்சியம் ;

ஆபத்தில் உதவவும், உதவி பெறவும் உயிரூட்டும் சக்தியாக நிற்க தூயதோர் அயலார் நட்பு ;

வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசி ஆராயும் ஒரு தத்துவப் போக்கு ;

எந்நேரமும் எந்தப் பிரச்சினைக்கும் பதிலளிக்கக் கூடிய ஒரு தத்துவக் கோட்பாடு ;

ஆத்திரம் கோபம் வரும் சந்தர்ப்பங்களிலும் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் உணர்ச்சிச் சமநிலை ;

எதிர்ப்புகள் ஏற்படும்போது கோழைத்தனமாக வாழ எத்தனியாத ஒரு திடமனம் ;

பிறருடைய துன்ப துயர வேளைகளில் அவர்களது உணர்ச்சிகளோடு சேர்ந்து, துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு அனுதாபப்படும் மனப்பாங்கு ;

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாது, மனந்திறந்து நேர்மையாகப் பிறரோடு பழகும் பண்பு ;

சந்தோஷமற்ற கட்டங்களையும் சமாளிக்கும் ஒரு சக்தி ;

வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றிய உயர் நோக்கு ;

முக்கியமானது எது, முக்கியமற்றது எது என உய்த்துணரும் சக்தி ;

ஆள், இடம், பொருள் போன்றனவற்றில் அளவுக்கு மீறிய பற்றிலிருந்து விடுதலை ;

தியாகம், அவமானம் ஏற்பட நேரினும் உண்மையை உண்மையாக ஏற்றுக் கொள்ளும் பரந்த மனப்பான்மை ;

அயலான் வீட்டில் நெருப்பெரியாவிடில் தன் வீட்டிலும் நெருப்பெரியக் கூடாது என்று எண்ணும் தன்னலமற்ற மனப்பண்பு ;

தனி வாழ்வில் ஒரு சமயாசாரம், திடசித்தம், தூயதைப் பற்றிய வியப்பு, நல்வாசினை, கருமங்களில் பொறுப்பு......!

## அன்றட வாழ்வின் அமைதி நிலைகள்

ஆண்டவனின் முன்னிலையில் வேண்டிநிற்கும் வேளைகளில் அமைதி ;

எடுத்த இலட்சியம் நிறைவேறுவதில் அமைதி ;
முயற்சியால் கிடைத்த பணத்தில் அமைதி ;
பாராட்டுவதிலும் பாராட்டப் படுவதிலும் அமைதி ;
கிடைத்த வெகுமானத்தில் அமைதி ;
பெற்ற பதவியில் அமைதி ;
அன்பு செய்வதில் அமைதி ;
அன்பு செய்யப்படுவதில் அமைதி ;
கொடுப்பதில் அமைதி ;
பெறுவதில் அமைதி ;
எதிர்ப்பதில் அமைதி ;
விட்டுக் கொடுப்பதில் அமைதி ;
பொறுமையில் அமைதி ;
விடுதலைப் போராட்டத்தில் அமைதி ;
செய்யும் உதவியில் அமைதி ;
பிறர் செய்த உதவியில் அமைதி ;
மன்னிப்பதில் அமைதி ;
மன்னிப்புப் பெறுவதில் அமைதி ;
செய்த தவறை நிவர்த்தி செய்வதில் அமைதி ;
வாழ்க்கையை உயர்த்தக் கையாண்ட முயற்சியில் அமைதி ;
சங்கீத இசையில் அமைதி ;
பயனுள்ள பொழுதுபோக்கில் அமைதி ;
வாசித்த ஒரு நல்ல கருத்தில் அமைதி ;
உற்ற நண்பர்களின் கூட்டத்தில் அமைதி ;
பெற்ற துணைவன் துணைவியின் அரவணைப்பில் அமைதி ;
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டில் அமைதி ;

கடினமான சூழ்நிலையில் இறைச் சித்தத்தை ஏற்பதில் அமைதி ;

நம்பிக்கையான நண்பரின் தோழமையில் அமைதி ;

உலக வாஞ்சைகளற்ற உளப்பாங்கில் அமைதி ;

வரையறைகளை ஏற்றுத் தாழ்மையாக வாழ்வதில் அமைதி ;

எமது திறன்கள் ஆற்றல்களில் அமைதி......!

## அன்றாட வாழ்வின் போலி அமைதி நிலைகள்

எம்மேல் அளவுக்கு மீறி அனுதாபப்படுவதில் போலி அமைதி ;

எமது தாழ்நிலையை எண்ணிச் சஞ்சலப் படுவதில் போலி அமைதி ;

தகுதிக்கு அப்பாற்பட்ட பேராசைகளில் போலி அமைதி ;

பிறரைக் குறைகூறித் திரிவதில் போலி அமைதி ;

எவ்விடயத்திலும் புறச் சூழ்நிலைகளில் பழி சுமத்துவதில் போலி அமைதி ;

பிறரின் வீழ்ச்சியில் மகிழ்ச்சி காண்பதில் போலி அமைதி ;

பிறரைக் கருவியாகப் பயன்படுத்திப் பெறும் பணத்திலோ, பதவியிலோ, பொருளிலோ, சௌகரியத்திலோ போலி அமைதி ;

தேவையற்ற பற்றுதல்களிலும், உலக வாஞ்சைகளிலும் போலி அமைதி ;

பணம் பொருள் சேர்த்து அவைகளின் அரவணைப்பில் போலி அமைதி ;

பிறரை அநியாயமாய்ச் சுரண்டிப் பெறும் காணி, பொருள், பணத்தில் போலி அமைதி ;

பிறர் மேல் பொறாமைப் படுவதில் போலி அமைதி ;

இறந்தகாலத்தைய சஞ்சலங்களில் போலி அமைதி ;

தன்னை ஏற்கமறுத்துப் போலி வேடம் தரித்து நடிப்பதில் போலி அமைதி ;

தனது தாழ்நிலையை மூடிமறைக்கும் போலிக் கௌரவங்களில் போலி அமைதி......!

## உண்மை அமைதியின் அடித்தளம்

தன்னறிவும் தூய கருத்துமே உண்மை அமைதிக்கு அடித்தளமாகும். தன்னறிவு என்பது ஒருவன் முதலில் தன்னையும், தன் வரையறைகளையும், சூழ்நிலையையும் ஏற்றுக் கொள்வதில் தங்கியுள்ளது. ஒருவன் தன்னை ஏற்றுக் கொள்ளாத நிலையிற்றான் மனமடிவும், மனக்குழப்பமும், உளவியற் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இயற்கை வாழ்விலிருந்து பிரிந்து, செயற்கை வாழ்வின் போலி வேடங்களைத் தரிக்கும் நிலை உருவாகுவதும் ஒருவன் தான் தன்னை ஏற்க மறுப்பதினால்தான்.

ஒருவன் தன்னிடமிருந்து தானே பிரிந்து தப்பியோடி போலி வேடங்களை அணிந்து கொள்ளக் கூடாது. அமைதியற்ற சூழ்நிலைகளில் கூட அமைதியைக் காணும் ஒரு புகலிடமாக ஒருவனது உள்

ளம் மாற வேண்டுமே தவிர, தப்பியோடும் சிறைச் சாலையாக அது அமையக்கூடாது. ஆகவே மனிதன் தன்னைப் பல்வேறு போலி வேடங்களிலிருந்து விடுதலையாக்க வேண்டும். அறிவு வளர்ந்து கொண்டு போகும் போது கூட அந்த அறிவு நிலைக்கான போலி வேடங்களை மனிதன் அணிந்து கொள்வதுண்டு. பொம்மையோடு விளையாடும் சிறு பிள்ளை போன்று, அறிவு வளர்ந்தவர்கள்கூட சில போலி விடயங்களோடு விளையாடுவதுண்டு. ஆகவே மனிதன் எந்நேரமும் விழிப்புணர்ச்சியோடு பல போலி நிலைகளைத் தியாகம் செய்ய வேண்டியதாயிருக்கும்.

* * *

அடுத்ததாக மனிதனின் வாழ்வில் தேவைப்படுவது தூயகருத்தாகும். அது அவனது சிந்தனை, சொல், செயல்களில் பிரதிபலிக்க வேண்டும். பல்வேறு தீய சார்புகள், மன நிலைகள், நோக்கங்கள் — வாழ்வைப் பற்றிய தூய கண்ணோட்டத்தை மங்க வைக்கின்றன. தெளிவாகச் சிந்திக்க முடியாமல், பிறரோடு இனிமையாகப் பழகவும் முடியாத ஒரு கடின மனநிலை உருவாகி வருவதுண்டு. அத்தகைய சூழ்நிலையில், மனிதன் தனது சிந்தனை, சொல், செயல் போன்றவற்றில் தூய்மையையும், கனிவையும், இனிமையையும் புகுத்தக் கடமைப்பட்டுள்ளான்.

மனத்தின்பால் அழுக்கற்றவர்களுக்குத்தான் வாழ்க்கை இலட்சியங்கள் வெற்றியாகின்றன என்பதை கவிஞர்கள் பின்வரும் கவிதைகளால் எடுத்துச் சொல்லுகிறார்கள் :

கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையும்
நற்றவ மியற்றலும் நவையிருனமும்
மற்றுள வறங்களும் மனத்தின் பாலழுக்
கற்றவர்க்கே பயனளிக்கு மென்பரால்.

தூயவுணு தூயநடை தூயமனத் தூயருக்குக்
காயமும் கண்ணுடியாம்.

தூயவுடை யூணுந் துகளறு வாழ்வுங் கொளலே
நோயு மருந்துமிலா நோன்பு.

தீய மனத்தாலும் திருவற்ற வாழ்வாலும்
நோய் பிறக்குமென்றே நுவல்.

''தூய உள்ளத்தோர் பேறு பெற்ருேர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்'' யேசு கிறிஸ்து.

''மனிதன் மறுபடியும் பிறந்தாலன்றி வாழ்வு பெறமாட்டான்'' என்று யேசு கிறிஸ்து சொல்லிய போது மனிதன் உள்ளத்திலே புதுப்பிக்கப் பெற்று உளமாற்றம் அடைய வேண்டும் என்று வற்புறுத்திஞர்.

''மோட்ச ராட்சியம் உங்களுக்குள்ளே'' என்று யேசு பெருமான் கூறியபோது அது ஒவ்வொருவர் உள்ளத்திஞுள்ளேயும் உள்ளது என்று விளக்கிக் காட்டிஞர்.

* * *

பின்வரும் கவிதைகளிலே சுத்தானந்த பாரதியார் எம்வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று வேண்டுகிருர்:

கொலை புலை களவு குடி மடி சூது குணம்
கெடுங் காம நோயின்றிக்
கலை வளர் அறிவும் கையிலே தொழிலும்
கருத்திலே கடவுளுங் கொண்டே
மலை வளர் அருவி போலவே யுதவியின்னுயிர்
உய்திடத் தூய
நிலைய மிங் கெழுக நின்னருளாலே நெஞ்சிலே
நிறை பரம் பொருளே.

தூய நல்லுடலும் தூய நல்லுயிரும்
தூய நற் புலன்களும் மனமும்
தூய நல்லுள்ளும் தூய நற்புறமும்
துலங்கிடுந் தூயநல் யோக
நேயர்கள் ஆன்ம நேயத்திற் கூடி
நிலவுல கின்புறும் பணிகள்
ஆயிரம் செய்யும் அருட் பணிச் சோலை
ஆக்கிட வரமருள் சிவமே!

* * *

உலகிலே படைக்கப்பட்ட அத்தனையுள்ளும் விசேட மாற்றம் அடையக் கூடியவன் மனிதனே. உடலிலே பிறந்து உள்ளத்தால் உயர்வடையக் கூடியவன் மனிதனே. தான் இல்லாத ஒரு நிலையிலிருந்து தான் விரும்பும் ஒரு நிலையை அடையக் கூடியவனும் அவனே. அதாவது தன் உள்ளத்திலே மறுபிறப்பு அடையக் கூடியவன்; மனத்திற் கொள்ளும் ஒரு இலட்சியத்தை நிறைவேற்றக் கூடியவன். ஆகவே மனிதன் தனது உள்ளத்தை உயர்ந்த இலட்சியங்களாலும், நல்ல கருத்துக்களாலும் எந் நேரமும் நிரப்பிக் கொண்டிருக்கக் கடமைப்பட்டுள்ளான்.

"எமது இலட்சியங்கள் விண்மீன்களைப் போன்றன. அவைகள் ஒவ்வொன்றையும் நாம் எட்டிப் பிடித்து விடுவதில்லை. ஆனால் அவை களிலிருந்து எமது திசையை நிர்ணயிக்கலாம்."

"அதுதான் எனது இயற்கை" "இதுதான் நான் பிறந்த சூழ்நிலை" என்றெல்லாம் சொல்லிக்கொண்டு எம்மைப் புதிதாக்கக் கூடிய நிலையை உருவாக்காமலிருப்பது நாம் படைக்கப்பட்ட நோக்கத்திலிருந்து தப்பி ஓடுவதாயமையும். சமுத்திரத்திலே மிதந்தாலும் மூடப்பட்ட போத்தல் நீரைச் சுவைக்காதது போன்று நாமும் மூடிய உள்ளங்களோடு வாழலாம். மாற்றமடைய விருப்பமில்லாமல் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று இதயக் கடினத்தோடு குறுகிய உள்ளத்தோடு வாழலாம். இப்படி வாழ்வது மிருக தாவர வர்க்கத்தைப் போன்ற ஒரு வாழ்வாகும். அத்தோடு எமது தாழ்நிலையை வளர்க்கும் ஒரு போலி வாழ்வாயமையும்.

பொய்மையிலிருந்து மெய்மைக்கும்
சாவிலிருந்து வாழ்விற்கும்
இருளினின்று ஒளிக்கும்... இட்டுச் செல்லுமாறு வேண்டி நிற்கும் உபநிடதத்தின் உயர் இலட்சியம் எமது இலட்சியமாகவும் அமைய வேண்டும். மனிதன் தனது வாழ்வில் திருத்தியமைக்கக் கூடியதைத் திருத்தியமைக்க, அவனால் திருத்தி அமைக்க முடியாத ஒரு நிலையை இறைவனின் அருள் திருத்தி அமைக்கும். ஏனெனில் இறையருள் இயற்கையை அழிப்பதல்ல, அதை மேம்படுத்துவதாகும்.

## அறிவெல்லாம் கடந்த இறையமைதி

மானிட உள்ளத்து அமைதிக்குக் கடவுளின் பங்கு என்ன? எத்தகைய அமைதியைக் கடவுள் மனித உள்ளத்திற்கு அளிக்கிறார்? மானிட உள்ளத்து அமைதிக்குக் கடவுள் தேவைதானா? என்று வினவாத உள்ளம் இவ்வுலகில் இல்லை. சுருங்கச் சொன்னால் இறைப் பராமரிப்பிலும், இறைச் சித்தத்திலும், இறைப் பிரசன்னத்திலும் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட அமைதியை அனுபவியாத உள்ளங்கள் இல்லை என்றே சொல்லலாம். சில சந்தர்ப்பங்களில் ஒரு உள்ளம் அனுபவிக்கும் அமைதி, இறைவனிடமிருந்து வருகிறது என்று அந்த உள்ளம் உணராமலிருக்கலாம்.

அமைதியான ஒரு இயற்கைக் காட்சியின் நடுவே நின்று கொண்டிருக்கும்பொழுது அந்த அமைதியை அனுபவிக்கலாம். தூய்மையான சிந்தனைகள் உள்ளத்தில் தவழ்ந்துகொண்டிருக்கும் பொழுது அதை அனுபவிக்கலாம். தேவையற்ற கவலைகள், கலக்கங்கள், சஞ்சலங்கள் இல்லாத மனநிலையோடிருக்கும்பொழுது அதை அனுபவிக்கலாம். இவையெல்லாம் இறையமைதியின் சாயல்கள். எமது அன்றாட வாழ்வில் எவ்வளவு அடிக்கடி எமது உள்ளத்தை இறைவன்பால் உயர்த்த முயற்சிக்கின்றோமோ அவ்வளவிற்கு இந்த இறையமைதியின் சாயல்கள் எமது உள்ளத்தைத் தொட்டுச் செல்லும். அன்பிற்கும், அமைதிக்கும், சமாதானத்திற்கும் ஊற்றாகிய கடவுளின் அமைதியில் மனித ஆவி பங்கு கொள்ளும் ஒரு நிலையை எவ

ரும் அறிந்துகொள்ளலாம். உலக பந்த பாசங்களால், சுகபோகங்களால் நிறைவு பெறுது ஏங்கித் தவிக்கின்றன மனித உள்ளங்கள். அந்த ஏக்கத்தினதும், தவிப்பினதும் அமுக்கத்திலே மனித ஆவி உறவைத் தேடி அலைகிறது. அந்த ஆவியின் பயணத்தில் ஆழமான ஒரு சக்தியை மனித ஆவி சந்திக்கவே செய்யும். அந்தச் சந்திப்பில் சங்கமமாவதுதான் இறையமைதி என்பதாகும்.

> அமைதியை அறிவில் தேடினேன், ஈற்றில் நான் கண்டது தெளிவற்ற மயக்கம்;
> அமைதியை உல்லாசத்தில் தேடினேன், ஈற்றில் நான் கண்டது களைப்பும் சோர்வும்;
> அமைதியைச் சம்பாத்தியத்தில் தேடினேன், ஈற்றில் நான் கண்டது ஏக்கமும் பயமும்;
> அமைதியை உடலின்பத்தில் தேடினேன், ஈற்றில் நான் கண்டது வெறுமையும் நிலையாமையும்;

இவையெல்லாம் அமைதியைத் தேடி அலைந்தோர் எமக்கு எடுத்துச் சொல்லியிருக்கும் அனுபவ உண்மைகளாகும்.

* * *

நிலையற்ற உலக இன்பங்களில் தோய்ந்து, அவற்றின் நிலையாமையைப் பட்டறிந்தபின் "நான் தேடி அலைந்தது யாரையுமல்ல, உன்னைத்தான்" என்று இறைவன்பால் சரணடையும் உச்சக் கட்டமே அறிவெல்லாம் கடந்த இறையமைதியாகும்.

இளமையில் இறைப்பற்று இல்லாமல் உலகாயத லௌகீக வாழ்வு வாழ்ந்தவர்கள், முதுமை எய்தும் தருவாயில் தம்மையறியாமலே இறைவன்

பால் தம்மைத் திசை திருப்புவதை நாம் பார்க்கையில் இந்த உண்மை மேலும் புலனுகின்றது.

"இறைவா எம்மை உமக்காகவே படைத்தீர்
உம்மில் வந்து சேருமட்டும் இவ்வுலகில்
எமக்கு நிம்மதியே இல்லை" புனித அகஸ்தின்.

"இறைவா நீர் எம்மை எவ்வளவு
மேன்மை யுள்ளவராகப் படைத்தீரென்ருல்
உம்மாலன்றி எம்மிதயம் நிறைவு பெறப்
போவதில்லை" புனித அகஸ்தின்.

இறைப்பிரசன்னத்திற்கு எம்மை விழிப்படையச் செய்வது எத்துணை சாந்தி தருவதாக இருக்கிறது!

## உலக வாழ்வு எனக்கு விடுத்த சவால்கள்!

நான் முன்பு கூறியது போன்று மனித புத்திக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட எதிர்பாராத அமைதிக் கணங்கள், சாந்த உணர்ச்சி நிலைகள், உயர்ந்த இலட்சியங்கள், தியாக சேவைச் சிந்தனைகள். இறையுணர்வுகள் எமது உள்ளத்தைத் தொட்டுச் செல்வதுண்டு.

அன்ருெருநாள் பூத்தமலரெனப் பொங்கியெழுந்து வந்த பெருநிலவின் ஒளியிலே ஓரிரவு உலாவிக் கொண்டிருந்தேன். அந்த அமைதியான இயற்கையின் எழிலிலே என்றும் இல்லாததோர் அமைதித் துளி என் உள்ளத்தைச் சாந்தப்படுத்திற்று. அந்த அமைதித் துளியின் பின்னணியிலே மனித உள்ளம் ஏங்கித் தவிக்கும் அமைதியைப் பற்றி ஆராயமுற்பட்டேன். அந்த ஆராய்ச்சி, அமைதிக்குப் பதிலாக உலக வாழ்வின் சவால்களா

கப் பெருக்கெடுத்து வந்தன. அவற்றில் ஒருசில பின் வருமாறு :

தனிப்பட்ட என் வாழ்வின் கற்பனைச் சஞ்ச லங்கள், ஆசையின் ஏக்கங்கள், இறந்த காலத் துக்கங்கள், வெறுப்பின் கொடூரம், நிறைவேரு ஆசைகள் படையெடுத்து வந்தன;

கோபங்கள், மனக்கசப்புகள், வெறுப்புணர்ச்சி கள் ஊற்றெடுத்து வந்தன ;

உற்ருர் உறவினரின் தேவைகள், நோய் பிணி கள், கஷ்டதுன்பங்கள், கடன்தனிகள், குடும் பப் பிரச்சினைகள் என் முன் எழுந்து வந்தன ;

ஒரு சில மனிதரின் சிறுமைத் தன்மான செயல் கள், நஞ்சு நிறைந்த உள்ளங்கள், பிளவுபட்ட நாக்குகள், பிளவுபட்ட நெஞ்சங்கள், சூழ்ச்சி, கபடு, வஞ்சகம், பொருமை என்பன சிறகு விரித்துப் பறந்து வந்தன ;

அரசியல், பொருளாதார, சமுதாயப் பாரபட் சங்கள், அநீதிகள், பிளவுகள், அடக்குமுறைக் கொள்கைகள் உருவெடுத்து உயிர்க் காட்சிகள் போல் என்முன் நின்று கொண்டிருந்தன;

சாதி வெறி, மொழி வெறி, இன வெறி, கட்சி வெறி போன்றவற்ருல் ஒதுக்கப்பட்ட சிறு பான்மை மக்கள், வாழ வழியறியாது தலைமேல் கைவைத்துச் செய்வதறியாது ஏங்கி நிற்கும் காட்சியும் என் முன் நின்றுகொண்டிருந்தது.

நானும் ஒரு சமயப் பணியாளன் என்ற முறையிலே, சமய வழிகாட்டிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளால் ஏற்படும் நிர்வாகக்

கோளாறு, அளவுக்கு மீறிய பாரம்பரியப் போக்கு, அதிகார ஆசை, அடக்கு முறைக் கொள்கைகள், சாதி இனச் சார்புகள் போன்றனவும் என் முன் நின்று கொண்டிருந்தன.

வேலையில்லாத் திண்டாட்டம், நீடித்த வரட்சி, பெருகிவரும் சனத்தொகை, வசதி படைத்தோரின் சுரண்டல் அநியாயம், கள்ள வாணிகம், கறுப்புப் பணம், பணவீக்கம், பதுக்கல், உயர்ந்து வரும் விலைவாசி போன்ற பொருளாதாரப் பிரச்சினைக ளும் தலைதூக்கி நின்றன.

வாலிபர் புரட்சி, மாடாக உழைத்தும் தகுந்த ஊதியம் பெறாத தோட்டத் தொழிலாளர், தனி நாடு கோரும் தமிழர் பிரச்சினை, தமிழனே தமி ழனைப் பங்கப் படுத்தும் பரிதாபக் காட்சி, கல்வித் துறையில் பாரபட்சப் போக்கு போன்ற சமூகப் பிரச்சினைகளும் என் முன் நின்றுகொண்டிருந்தன.

## ஆகவே நான் தேடுவது ஒரு போலி அமைதியா?

உலக வாழ்வு எனக்கு முன் குவித்த சவால் மூட்டையைப் பற்றிச் சிந்தித்த வேளையில், முழு உலகமுமே ஒரு பிரச்சினைக் கும்பமாகத் தோன்றி யது. அவ்வேளையில் ஒரு அமைதியிழந்த நிலை உருவாகியது. பின்பு, அந்தச் சவால் மூட்டையின் மத்தியிலும், இறைப் பிரசன்னம் ஓர் உன்னத அமைதி நிலையை அளிப்பதாக இருந்தது. அந்த அமைதித் துளியின் பின்னணியில் எனக்கு முன் இருந்த பிரச்சினைக் கும்பம் வெயிலைக் கண்ட பனி போல் ஓடி ஒளிந்து கொண்டது.

ஒரு சில விநாடிகளின் பின், மேலும் ஒரு சிந்தனை உருவெடுத்தது. அதாவது, உலக வாழ்க்கையின் இத்தனை சவால்களிலிருந்து தப்பியோடும் ஒரு போலி அமைதியைத்தான் இறைவன் மனித உள்ளத்திற்கு அளிக்கின்றாரோ என்று என் மனம் கேட்டது. யாரோ கூறிய தீப்பறவையின் கதையும் அவ்வேளையில் குறுக்கிட்டது. தீப்பறவையைப் பிடிப்பதற்குத் துரத்திச் சென்றால், ஒரு சில மைல்கள் ஓடிய பின்பு களைத்துவிட்ட தருவாயில் அது தன் தலையை மட்டும் மண்ணிற்குள் புதைத்து விடுமாம். புதைத்துவிட்டு தான் தப்பிவிட்டதாகவும், ஒளித்துவிட்டதாகவும் எண்ணி அமைதிகொள்ளும் வேளையில், அது வேட்டைக்காரனின் கையில் வெகு இலகுவாகச் சிக்கிவிடுகிறதாம். அத்தகைய ஒரு போலி அமைதிதானோ இது என்று மேலும் என் மனம் கேட்டது. அப்படியாகவும் அது தோன்றவில்லை. மாறாக, மானிடர் படும் துன்பங்களுக்கு மேலும் ஒரு புதிய கண்ணோட்டத்தோடு விழிப்படைந்த நிலையாக அது தோன்றியது.

வாழ்க்கையின் சவால்களைப்பற்றி இடையறாது எண்ணிச் சஞ்சலமடைந்து, சிந்தனை குழம்பி, மனக் குழப்பமடைந்து, உள்ளத்து அமைதியை இழந்து, எந்நேரமும் வாடுவதால் உலக சவால்களுக்குத் தீர்வு காண முடியாது. இந்த விழிப்புணர்வில், அவை யாவையும் மானிட சரித்திரத்தின் காரண கர்த்தாவிடம் ஒப்படைத்துவிட்டதில் ஏற்பட்ட ஆழ்ந்த அமைதியாக அது எனக்குத் தென்பட்டது.

அத்தோடு பாய்வதற்கு முன் அமைதியாகப் பதுங்கித், தன் சக்திகளை ஒருங்கு சேர்க்கும் ஒரு புலியின் அமைதியாக அது தென்பட்டது. எத்தகைய நிகழ்ச்சிகளாயினும் ஏற்கனவே அவை யாவும் இறைவனால் திட்டமிடப்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். மனிதன் கையில், அதுவும் தனிப்பட்ட ஒருவரின் ஆட்சிக்குள் எல்லாம் அடங்குவதில்லை. இறைப் பராமரிப்பு என்று ஒன்றுண்டு. ஆகவே இத்தனை சவால்கள் மத்தியிலும் "வருந்திச் சுமை சுமப்பவர்களே! வாருங்கள் என்னிடம். நான் உங்களைத் தேற்றுவேன்" என்று அழைத்த இறை மகன் இயேசுவின் நிறை அமைதியாக அது எனக்குத் தென்பட்டது.

உலக சவால்களை எதிர் நோக்குவதற்கு மனிதனின் சேவை என்ன என்பதைப் பற்றி ஆராய முற்பட்டேன். அந்த ஆராய்ச்சி எனக்கு விடுத்த பதில் என்னவென்றால் இறைவனால் நிரப்பப்பட்டால்தான் உண்மையான சேவை செய்யமுடியும் என்பதாகும். உள்ளக் கசடுகள் நீக்கப்பட்டு வெறுமையாக்கப்பட வேண்டும். தன்னலம் என்ற அரக்கனின் கெடுபிடியிலிருந்து விடுதலை அடைய வேண்டும். அதற்கு முன் மனித சேவை மனப்பான்மை தன்னலங் கருதுவதாகத்தான் இருக்கும். சுயநல மனப்பான்மையோடு செய்யும் சேவை இறுதி வெற்றியை அடையுமா? அடையவே அடையாது.

சவால்கள் சரிந்தன!

உலகமளித்த சவால் மூட்டையை ஏற்றபின், அதை மெதுவாக என்னுள்ளத்திலிருந்து இறக்கினேன். 'இறைவா இதை ஏற்றருள்'' என்ற வேண்டுதலோடு அவர் கையில் ஒப்படைத்துவிட்டு சுமையற்ற ஓர் உள்ளத்தோடு ஒரு சில விநாடிகள் வெறுமையாய் நின்று கொண்டிருந்தேன். முன்புபோல் எனக்கும் இறைவனுக்கும் நடுவே நின்றுகொண்டிருந்தது சவால் மூட்டையல்ல. எனக்கும் இறைவனுக்குமிடையே வாழ்க்கைச் சவால்கள் கட்டியெழுப்பிய பெருஞ்சுவர் தொம்மென்னு இடிந்து விழுந்தது. இற்றைவரை எனக்குப் பதிலாக என் பிரச்சினையைக் குறுக்கே வைத்து, அமைதியிழந்து நின்ற குறுகிய வாழ்வு என்னை விட்டு பிரிந்தது. என் பிரச்சினைகள் அவர் கையிலும், என் கையில் அவர் பராமரிப்பும் நின்று கொண்டிருந்தன. பிரச்சினைகளற்ற மனிதனுக நின்றுகொண்டிருந்தேன். அது ஒரு அமைதியின் சாயல். சாயலைக் கடந்து முழுமையை மனிதன் இவ்வுலகிலேயே அனுபவிக்க முடியும் போல் தெரிகிறது. ஆனால் அது சுலபமல்ல. என்றாலும், மனிதன் பிரச்சினை மையமற்றவனுக வாழ முடியும் என்று அந்த ஒருசில நிமிட அனுபவம் எனக்குக் கற்பித்தது.

> ''கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள். மற்றவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். நாளைய தினத்தைக் குறித்துக வலைப்படாதீர்கள்''

என்று இறைமகன் இயேசு சொல்லிய வார்த்தைகளின் ஆழத்தை அதில் காணக்கூடியதாக இருந்தது.

> "இறைவனில் இளைப்பாற்றி அடைந்துவிட்டவன் அவர்தம் வேலையை முடித்து இளைப்பாறுவது போலவே தானும் தன் வேலையை முடித்து இளைப்பாறுகிறான்" என்று

மேலும் ஒரு வேதாகம வாக்கியம் கூறும் உண்மையான இளைப்பாற்றியை சிறு சாயலாகக் காணக்கூடியதாயிருந்தது.

ஆகவே இந்த அமைதியானது தாயும் சேயும் கொள்ளும் உறவைப் போன்றதாகும். பசியோடு அமைதியற்று புரண்டு உருண்டு உழன்றுகொண்டிருக்கும் குழந்தை, பாலைப் பருக ஆரம்பித்ததும் சத்தஞ் சந்தடியின்றி சமாதான நிலையை எய்துகின்றது. போதிய பாலைப் பருகியதும், உறக்க நிலையை எய்துகிறது. அதே அமைதியாக இதுவும் தோன்றியது.

> "இதோ ஆற்றுப் பெருக்குப்போல் அவர் மேல் சமாதானத்தைப் பொழிந்திடுவோம். மடை புரண்டு ஓடும் வெள்ளம்போல் அவள் மேல் மக்களினங்களின் மகிமையை ஓடச் செய்வோம். அவள் பாலை அருந்துவீர்கள். மார்போடு அணைக்கப்படுவீர்கள். மடிமேல் சீராட்டப்படுவீர்கள். தாயானவள் தன் மகவைச் சீராட்டுவதுபோல் நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம்"
>
> (இசையாஸ் ஆகமம்)

## அமைதி என்பது குழப்பமற்ற மனநிலை, பிரச்சினைகள் அற்றதல்ல

அமைதியாக் ஒரு நாற்காலியில் அமர்ந்தேன். பல்வேறு கலக்கங்களால் இறுகக் கட்டப்பட்டிருந்த என்னுள்ளம் தளர்ந்தது. அமைதி நிலை, என் நாடி நாளங்கள் தசை வழியாக ஓடிச் செல்வது போன்ற ஒரு நிலையை உணரக்கூடியதாயிருந்தது. முன்பு தளர்வுற்றிருந்த என் உடலிலே ஒருவித புத்துயிர் ஏற்பட்டது. அப்பொழுது, அமைதி என்பது குழப்பமற்ற மனநிலை, பிரச்சினைகள் அற்ற தல்ல என்பதை உணர்ந்தேன். இந்த அமைதி யானது உள்ளத்திற்கும், உடலுக்கும் ஓய்வு தரும் சாந்தி என்றும், தெளிவான சிந்தனையில் ஊற் றெடுத்தோடும் ஒரு குளிர்ந்த மனநிலையென்றும் கண்டு கொண்டேன். அதைச் சுவைக்க ஆரம்பித் தால் அது அளிப்பது :

முகத்தில் பிரகாசம்
உதட்டில் புன்னகை
கண்களில் ஒளி
பார்வையில் கனிவு
பேச்சில் இனிமை
வாழ்வில் நேர்மை
ஆழ்ந்த பொறுப்புணர்ச்சி
சீரிய கட்டுப்பாடு
பிறரோடு பழகுவதில் இன்பம்.

மக்கள் இவ்வுலகில் அமைதி தரும் நிலைகளாகக் கருதுவதை ஆராய்ந்தேன் :

தளப்பமற்ற பொருளாதார நிலை
பிறருக்குதவும் சமூக சேவை
தகுந்த ஊதியம் தரும் தொழில்
முயற்சியால் அடைந்த உயர் பதவி
அன்பு நிறைந்த தாம்பத்திய வாழ்வு

இவை மனிதனுக்கு அமைதி தருவன என்பதில் ஐயமில்லை. ஆனால் இவைகளும் நிலையற்றவை. ஆகவே இவைகளிலிருந்து பெறும் அமைதியிலும் பார்க்கப் பன்மடங்கு மேலான ஆறுதல் அளிப்பது, மறைந்து நிறைந்திருக்கும் இறைப் பிரசன்னத்தில் ஏற்படும் அமைதியாகும் எனவும் உணர்ந்து கொண்டேன்.

மனித ஆவியானது, இறையுணர்வோடு இரண்டறக் கலக்கும்போது "அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் போன்ற நற்பண்புகளுக்குத் தானாகவே பழக்கப்படுகின்றது. இறை ஆவி அளிப்பது "ஞானமும், மெய்யுணர்வும், ஆலோசனையும், வல்லமையும், தேவபயமுமாகும்."

* * *

இறையுணர்வு அளிப்பது உயர்ந்த இலட்சியம். உயர்ந்த இலட்சியம் என்பது இயற்கையையும், சூழ்நிலையையும், மனிதரையும் இறைத்திட்டத்திற்கமைய முதன் முதலில் அப்படியே ஏற்றுக் கொள்வதாகும். ஏற்றுக் கொண்ட பின், அவை எவ்வாறு சமாதான சமத்துவ சகோதரத்துவ சுதந்திர ரீதியில் உருவாக்கப்பட வேண்டுமென்று அயராது உழைப்பதுமாகும். மனிதர் மேலும், சூழ்நிலை மேலும் நாம் கொண்டுள்ள கெடுபிடியிலிருந்தும், வெறுப்புணர்ச்சிகளிலிருந்தும் எம்மை விடுதலையாக்க அடித்தளமாக விளங்குவது இறையுணர்வாகும். உள்ளத்திலே ஒளிந்து கிடக்கும் தப்பான சிறு சிறு மன நிலைகளைத் தேடிப்பிடிக்கவும், தேடிப்பிடித்து அவற்றின்மேல் வெற்றி கொள்ள வேண்டிய சக்தி அளிப்பதும் அந்த இறையுணர்வேதான்.

மேலும் இந்த இறையுணர்வு எனக்களித்த முக்கிய விழிப்புணர்வு யாதெனில், சமயாசாரங்களைப் பற்றிச் சண்டைகளிடுவதும், கோட்பாடுகள் கட்டுக்கோப்புகளையிட்டு தர்க்கிப்பதும் கருத்தற்றதென்பதாகும். ''அமுதம் வைத்திருக்கும் கலங்களைப்பற்றிப் போர் புரியாதீர்கள். நாம் நுகரவேண்டியது அமுதமே'' என்று அரவிந்தர் சொல்லிய உண்மையின் ஆழத்தை உணரக் கூடியதாக இருந்தது.

அமைதியான வாழ்விற்கு அடித்தளமாக விளங்க வேண்டியது இறைப்பிரசன்னத்திற்கு விழிப்படைவதாகும். அத்தகையதொரு விழிப்புணர்வு வாழ்க்கைப்பிரச்சினைகளுக்குத் தற்கால உளவியல் அளிக்கும் வழிகாட்டல்களிலும் பார்க்க எத்துணை மேலானது என்பதையும் கண்டு கொண்டேன்.

''கடவுள் இருக்கிறார்'' என்று ஏற்றுக் கொள்வது மட்டும் கருத்தற்றதாகத் தோன்றுகிறது. அனேகமான மக்கள் கடவுள் இருக்கிறார் என்று ஏற்றுக் கொள்கின்றனர். அது மிக மிகச் சுலபமான விடயம். ஆனால் கடவுளைத் தம் வாழ்க்கையில் பயன்படுத்தாவிடில், அவரைச் சுவைக்காவிடில் அது மரத்திலே தொங்கும் மாங்கனிக்கு ஒப்பாகும்.

> ''ஆண்டவர் எவ்வளவு நல்லவரென்று சுவைத்துப் பாருங்கள் ; அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறு பெற்றவன்'' என்கிறார் தாவீதரசர்.

''என்னை நோக்கி 'ஆண்டவரே ஆண்டவரே' என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேர மாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான்'' என்றார் யேசு.

இறைப்பற்றானது, கலங்கிச் சோர்வடைந்து, தலைமேற் கைவைத்து, செய்வதறியாது அந்தரித்து நிற்கும் அவல நிலையில் அமைதியளிப்பதாயில்லா விடில், இறைவன் இருக்கின்றார் என்று மட்டும் ஏற்றுக்கொள்வது கருத்தற்றதாகும். இறைப்பற்றானது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு அளிக்காவிடில், தீர்வு அளிக்காவிடினும் வாழ்க்கையை ஒரு புதிய கண்ணோட்டத்தோடு நோக்கும் சக்தியளிக்காவிடில் கடவுள் இருக்கிறார் என்று மட்டும் ஏற்றுக்கொள்வது கருத்தற்றதாகும்.

''கடவுள் இருக்கிறார்'' என்ற நம்பிக்கை வாழ்க்கையை வழிநடத்திச் செல்லும்; அது ஒருவர் வாழ்வில் ஒரு புதிய கண்ணோட்டத்தைக் கொடுத்து, வாழ்க்கையை மாற்றி அமைக்கும் சக்தியை அளிக்கும். அது ஒருவர் வாழ்வில் உருவாக்கும் தலையாய பண்பு அன்பாகும்;

''அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது.
அன்பு அழுக்காறு கொள்ளாது,
பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது,
இழிவானதைச் செய்யாது, தன்னலத்தைத்
தேடாது,
சீற்றத்திற்கு இடந்தராது, வர்மம் வைக்காது.

அநீதியைக் கண்டு மகிழ்வுருது;
உண்மையைக் கண்டு உள்ளம் மகிழும்.
அனைத்தையும் தாங்கிக் கொள்ளும்;
பிறர்மீது நல்லெண்ணம் இழப்பதில்லை;
நம்பிக்கையில் தளர்வதில்லை;
அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்.''

(1 கொரி. 13)

''அது சமாதானத்தை நாடும்;
பொறுமையைக் கடைப்பிடிக்கும்;
இணக்கத்தை விரும்பும்;
இரக்கமும் நற்செயல்களும் பெருகச் செய்யும்;
நடுநிலை தவருது; கள்ளமறியாது.''

(யாகப். 3/17 – 18)

## உய்த்துணர்வு ஓர் புதிய கண்ணோட்டம்

ஆய்ந்தறிதல், உய்த்துணர்தல், புதுநோக்கு போன்றன மனிதன் தன் அறிவியல் வாழ்வில் அநுபவிக்க வேண்டிய முக்கிய கட்டங்களாகும். அறிவியல் வாழ்வு என்பது ஒரு நீண்ட பிரயாண மாகும். தொடக்கத்தில் அது சுலபமாக இருக்க லாம். முடிவும் சுலபமாக இருக்கலாம். ஆனல் இடைப்பகுதியல்ல.

அடிக்கடி நான் எனது முகம் பார்க்கும் கண் ணுடிக்கு முன் செல்லும்போது உடனடியாக நான் பார்ப்பது எனது முகத்தையே. ஆனல் கண்ணுடி யின் மேற்பரப்பிலுள்ள அழுக்கை நான் அவதா னிக்க வேண்டுமாயின் எனது பார்வையில் ஒருவித திருப்பம் ஏற்படவேண்டும்.

காற்று எந்நேரமும் எம்மோடு இருக்கிறது அதை எந்நேரமும் சுவாசிக்கிறோம். ஆனல் நர்ன்

காற்றைச் சுவாசிக்கிறேன் என்று விழிப்புணர்வு அடைவது ஒரு புதிய உய்த்துணர்வாகும். அவ்வாறே இறைப் பிரசன்னத்தையோ, இறைத் தோழமை யையோ, இறைப் பராமரிப்பையோ உய்த்துணர்வ தற்கு மட்டுமன்றி, வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் பீடுநடை போடுவதற்கு அடிப்படையாய் அமைய வேண்டியது உய்த்துணர்வாகும்.

காற்றை எந்நேரமும் சுவாசிக்கிறோம். ஆனால் அதன் சக்தியை எந்நேரமும் நாம் உணர்வதில்லை. புயல், சூறாவளி, சுழற்காற்று போன்றன ஏற்பட் டால் காற்றிற்கு எவ்வளவு சக்தியுள்ளது என்று வியப்பும், ஆச்சரியமும், விழிப்புணர்வும் அடைகி றோம். அவ்வாறே வாழ்வில் குறுக்கிடும் பிரிவு, வறுமை, சாவு, நோய், ஏமாற்றம், தோல்வி, தனிமை, மனமடிவு, சிறைவாழ்வு போன்ற வாழ் க்கை அனுபவங்கள், நிகழ்ச்சிகள் எமக்கு இறை யுணர்வையும் புதிய திருப்பத்தையும் பலாத்கார மாக எம்மில் ஏற்படுத்துவதுமுண்டு.

உய்த்துணர்வு, ஆய்ந்தறிதல், புதுநோக்கு போன்றவற்றிற்கு அடித்தளமாய் அமையவேண்டி யது இறையுணர்வாகும். விடயங்களின் ஆழத்தை அளவிடுவதற்கும், பதரினினூடாக மணியை அறி வதற்கும், உள்ளங்களின் ஆழங்களை அலசிப் பார்ப் பதற்கும் அடிப்படையாய் அமைவது இறையுணர் வாகும். இறையுணர்வு என்பது ஐம்புலன்களால் கண்டுகொள்ள முடியாததொன்றாகும். ஐம்புலன்க ளால் உணர முடியாத ஒன்றோடு மனிதன் தொடர்பு கொள்ளும்போது மனிதன் ஆழமாகச் செல்கிறான்.

மேற்பரப்பிலுள்ள வாழ்வை விடுத்து ஆழத்தை அனுபவிக்கிறன். ஆகவேதான் இறையுணர்வு மனிதனது உன்னதமான வாழ்விற்கு அடித்தளமாகும்.

* * *

மனப்பாடமாகத் தெரிந்த செபங்களை ஒன்றன் பின் ஒன்ருக மனதை ஒருநிலைப்படுத்திச் சொல்வதில் சிலர் இறைத் தோழமையை உய்த்துணருகிருர்கள்.

இறைநாமத்தைத் திருப்பித் திருப்பி சொல்வதில் சிலர் இறைத் தோழமையை உய்த்துணருகிருர்கள்.

இறைவனின் வார்த்தையடங்கிய வேதாகமத்தை வாசிப்பதிலும், குர்ஆன், உபநிடதம் போன்ற பக்தி இலக்கியங்களை வாசிப்பதிலும் சிலர் இறைத் தோழமையை கண்டுணருகிருர்கள்.

அமைதியான தியானம், யோகாசனம் போன்ற பயிற்சிகளில் சிலர் இறைப் பிரசன்னத்தை உய்த்துணருகிருர்கள்.

மனித வல்லமையால் ஒன்றும் செய்ய இயலாத ஒரு துன்பக் கட்டத்தில், வாழ்வையே சரணடையச் செய்த கட்டத்தில் இறைத் தோழமையைச் சிலர் உய்த்துணர்ந்திருக்கிருர்கள்.

இறைப் பிரசன்னத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டால் இறைத் தோழமையைக் கல்லிலும் முள்ளிலும், காட்டிலும் வயலிலும், ஆற்றிலும் மலையிலும், அண்மையிலும் சேய்மையிலும், ஆபத்திலும் அரவணைப்பிலும், இன்பத்திலும் துன்பத்திலும் அனுபவிக்க முடியும்.

"இறைவனது தோழமை சிறைக்கூடத்தின் கதவோடு நின்றுவிடுவதில்லை. சிறையுள்ளேயும் அத் தெய்வீகத் தோழமையை உணர்கிறேன்"

மார்ட்டின் லூதர் கிங்.

மூடிய கண்களில், தாளிட்ட கால்களில், விரித்த கைகளில், குவித்த கரங்களில், அடங்கிய சிந்தையில் ஆண்டவன் தன் தோழமையை தன் அன்பர்கள் அள்ளிப்பருக, சொரிந்தவண்ணம் இருக்கிறான்.

இறைவனது தோழமையை உய்த்துணர என்னென்ன தேவை என்பதைச் சுத்தானந்த பாரதி பின்வரும் கவிதையில் எடுத்துக் காட்டுகின்றார்:

பொறிகளடங்கி மனமடங்கிப்
புத்தியடங்கிப் புறஞ்சொல்லும்
வெறிகள் அடங்கிப் புகழ் விரும்பும்
வேட்டையடங்கிப் பொய்ச் சமய
நெறிகளடங்கி நானென்ற
நினைவுமடங்கி யுள்ளத்தே
அறிவை அறிந்தங்கறிவானால்
அறிவானந்தம் பெறலாமே.

ஹென்றி பேவர் (Henry Fabre) என்னும் விஞ்ஞானி முதுமையடைந்திருந்த காலத்தில் அவருடைய நண்பர் ஒருவர் அவரிடம் "நீர் கடவுளிடம் விசுவாசம் கொண்டுள்ளீரா?" என்று கேட்டார். அதற்கு அவ்விஞ்ஞானி "நான் கடவுளிடம் விசுவாசம் கொண்டுள்ளேன் என்று சொல்லமுடியாது. ஏனெனில் நான் அவரைக் காண்கிறேன். அவரின்றி நான் எதையும் விளங்குவதில்லை. அவரின்றி எல்லாம் இருள்மயம். என்னுடைய உடலி

லிருந்து என் தோலை இலகுவாக எடுத்துவிடலாம் ஆனால் என்னுள்ளத்திலிருந்து என் கடவுள் விசுவாசத்தை அவ்வளவு இலகுவாக நீர் எடுத்துவிடமுடியாது'' என்று பதிலிறுத்தார்.

## விழிப்புணர்வு அளித்த திருப்பம்

மனிதன் வாழ்க்கையில் மாறிக் கொண்டே இருக்கிறான். தீயவனாகவோ அன்றேல் நல்லவனாகவோ மாறி வருகிறான். நல்லவனாக மனிதன் வாழ முயற்சிக்கும் போது, அவன் பல்வேறு தியாகங்களை எதிர் நோக்கியே ஆகவேண்டும். ஆனால் தீயவனாக மாறுவதற்குத் தியாகங்கள் தேவைப்படாது. தீமைக்கு இட்டுச் செல்லும் வழிகள் பல.

''பாவம் என்னும் கல்லறைக்குப் பல வழி
தர்ம தேவன் கோவிலுக்கு ஒரு வழி''

இறைப்பிரசன்னமோ அல்லது இறையுணர்வோ மனிதனின் வாழ்வில் திருப்பத்தை உண்டு பண்ண வேண்டுமாயின், அவனது உடல் நிலையும், மனோதத்துவ நிலையும் பதப்படுத்தப்பட வேண்டும். கல்லும் முள்ளும் நிறைந்த கட்டாந்தரையில் சூரிய ஒளியோ மழையோ நாம் விரும்பும் பயனுள்ள மாற்றத்தை உண்டுபண்ணுவதில்லை. ஆனால் உழுது பண்படுத்தப்பட்டு ஒழுங்காக நடப்பட்டு பசளையிடப்பட்ட பயிர், நாம் விரும்பும் பயனை அளிக்கவே செய்யும்.

இறைப்பிரசன்னத்திற்கு விழிப்படைந்து, இறைவனின் தோழமையில் நின்றுகொண்டிருந்த ஒரு சில விநாடிகளில், அது எனக்கு அளித்த திருப்பத்தின் சாயல்கள் பல. அவை சில அறிஞர்களின் ஆழமான கருத்துக்களாக இருந்தன. அவை எவ்

வாறு என் உள்ளத்திற்குச் சாந்தியும் ஓய்வும் அளித்தன என்பதைச் சொல்லில் வடிக்க முடியாது. எனினும் அவற்றில் சில பின்வருமாறு :

''இறைவா நீ படைத்த இந்த உலகை மாற்றி அமை. முதலில் என்னோடு அதைத்தொடங்கு''

''உன்னைத் திருத்து உலகம் தானாகவே திருந்தும்''

''உனக்குரிய இடத்தில் நீ வாழ்ந்தால் உன் அயலான் தனக்குரிய இடத்தைத் தானே பெற்றுக்கொள்வான்''

''ஒருவன் தான் தனக்கெதிராகப் புரியும் குற்றங்களுக்காக நீதி மன்றத்திலே நிறுத்தப்பட்டால் அவன் தூக்குத் தண்டனைக்குத் தப்ப மாட்டான்''

''உலகிற்கு நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை தான் செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு. அதுவே உலகிற்கு நீ செய்யும் அரும்பெரும் நன்மையாகும்'' விவேகானந்தர்.

''அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யாவிடல்'' திருவள்ளுவர்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்'' திருவள்ளுவர்.

''பிறர் உனக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாயோ, அதையே நீயும் அவர்களுக்குச் செய்'' யேசு.

''நீ உன் எதிரியோடு போகும்போது வழியிலேயே விரைவாகச் சமரசம் செய்து கொள்''
யேசு.

"யாராவது உன் வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு"
யேசு.

"உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்துவோர்களுக்காகச் செபியுங்கள்" யேசு.

"பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்" யேசு.

"அகமேறச் சுகம் ஏறும்"

"ஆசையை ஒழி சாந்தி பெறுவாய்" புத்தர்.

"தன்னலத்தை ஒழி தலைவனுவாய்"
இந்து சமயம்.

அமைதியாக இறைப்பிரசன்னத்தின் விழிப்புணர்விலே நின்றுகொண்டிருந்த ஒரு சில விநாடிகளில், என் உள்ளத்திலே ஓடிய ஒரு சில அமைதித் துளிகள் இவை. ஆழமும், அன்பும், அறநெறியும், அனுபவமும் நிறைந்த கருத்துக்கள் இவை. மனிதன் தன்னுணர்வும் தன்னறிவும் கொண்டு, இன்புற்று வாழ இணைபிரியா நண்பர்களாக எந்நேரமும் உள்ளத்தில் குடியிருக்கவேண்டிய ஆயுதங்கள் இவைகள் என்றும் உணர்ந்து கொண்டேன்.

மேலே கூறப்பட்டவை, சமுதாயத்திலே மனிதரோடு வாழும்போது நாம் கையாள வேண்டிய ஆயுதங்கள். இவை ஒரு வீட்டின் மேல் பரப்பைப் போன்றன. ஆனல் இறையுணர்விற்கு அத்திவாரமாய் விளங்கும் ஒரு சில கருத்துக்களும் என் மனதில் ஓடிக்கொண்டிருந்தன. அவை பின்வருமாறு:

"வருந்திச் சுமை சுமப்பவர்களே என்னண்டை வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன்" யேசு

"நல்ல ஆயன் நானே. என் ஆடுகளை நான் அறிவேன். என் ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கிறேன்" யேசு

"சிறு மந்தையே அஞ்சாதே; ஏனெனில் உங்கள் தந்தை தம் அரசை உங்களுக்குக் கொடுக்கத் திருவுளங் கொண்டார்" யேசு

"இதோ நான் உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்" யேசு

"காசுக்கு இரண்டு குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றில் ஒன்றுகூட உங்கள் தந்தையால் அன்றி நிலத்தில் விழாது. உங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டுள்ளது. எனவே அஞ்சாதீர்கள்" யேசு

"பரம தந்தை இரக்கமுள்ளவர். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார். நீதியுள்ளோர் மேலும், நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார்" யேசு

அமைதியாக இறைப்பிரசன்னத்தில் நின்று கொண்டிருந்த ஒரு சில விநாடிகளில் ஓடிய அமைதித் துளிகள் இவை. இறைப் பராமரிப்பையும், இறைவனின் இரக்கத்தையும், இறைவனின் துணையையும் அள்ளித் தந்த அமுத வேத வாக்கியங்கள் இவைகள்.

## வன்செயல் வழிகள் வீழ்ந்தன

வன்முறையும், வன்செயலும், பலாத்காரமும் காட்டி எமது கருத்தைத் திணிக்க முற்படுவது எந்த மனிதனிடமும் உள்ள பலவீனமாகும். எமது நோக்கத்திற்கேற்ப மற்றவர் வாழவேண்டும் என்று எண்ணுவது எமது தணியாத ஆசை. எமது இலட்சியத்தைத் தவிர மற்றவரின் இலட்சியங்களையும் திறமைகளையும் அலட்சியம் செய்வது எமது இன்னொரு பலவீனமான போக்காகும். இறைவன் என்ற பேருடலில் எல்லோரும் அவயவங்கள் என்ற அத்திவாரமான உண்மையை ஏற்க மறுத்து நாம் வாழ்வதும் உண்டு. அளவுக்கு மீறி மற்றவர் விடயங்களில் தலையிட்டு அவர்களின் அமைதியைக் குலைப்பதுமுண்டு.

இறைப் பிரசன்னத்திலே நின்றுகொண்டிருந்த வேளையில் மேற்கூறப்பட்ட வன்செயல் வழிகள் யாவும் வீழ்ந்தன. புதியதோர் இலட்சியம் என்னுள் புகுந்தது. இந்த இலட்சியம் எவ்வளவு நாள் நீடிக்குமோ என்று அங்கலாய்த்த அந்த வேளையில் "இறைவா இந்த இலட்சியத்தை என் வாழ்வில் நிலை நிறுத்து" என்று என் இதயம் இறைவனிடம் ஒரு விண்ணப்பமும் அக்கணத்தில் விடுத்தது.

அத்தகைய ஒரு தன்னிறைவும், தன்னுணர்வும், அறநெறி வாழ்வின் விழிப்புணர்வும் ஏற்பட மனிதரைப் பற்றிய மனிதத் தன்மையை உய்த்துணரக் கூடியதாக இருந்தது.

மனிதன் ஒரு உணர்ச்சிக் கும்பம். ஆகவே மனிதரின் உணர்ச்சி வசமாகும் நிலைகளையும், ஒவ்வொரு

மனிதனின் தனித்துவத்தையும் மதித்து நடக்க வேண்டியதன் முக்கிய விழிப்புணர்வு வெளிப்பட்டது. மனிதன் பல்வேறு சூழ்நிலைக்குட்பட்டவன். அவனது சரீர நிலை, மனோதத்துவநிலை, வெளிப்படா உணர்ச்சிகளின் அமுக்கம், வாழ்க்கையில் கொண்டுள்ள கற்பனைகள், ஒளித்து வைத்திருக்கும் இறந்தகால இரகசியங்கள், எதிர்கால இலட்சியங்கள், ஆன்மீக, அறவியல், அறிவியல் சூழ்நிலைகள் போன்ற பல்வேறு துருவங்கள் ஒருவனது வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றன. ஆகவே மனிதன் ஒரு சூழ்நிலைப் படைப்பே. ஆகவே அவனில் நாம் காணும் ஒருசில தவறுகளுக்காக, பலவீனங்களுக்காக அவனது சூழ்நிலையை மறந்து, தீர்ப்பிட்டு, அலட்சியம் செய்வது முற்றிலும் தவறாகத் தென்பட்டது. ஆகவே மனிதர்மேல் நாம் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சிகளுக்கு எதிராகப் போராட்டம் செய்வது எமது தலையையே சுவரோடு மோதுவதைப் போன்றதாகும். பிறரை அப்படியே இறைத்திட்டத்திற்கேற்ப ஏற்றுக்கொண்டு, சகோதரத்துவ மனப்பாங்கோடு, பிழைகளைத்தாங்கி, நல்வழிப்படுத்த முயற்சிப்பதே அமைதிக்கு வழியாகும். ஒருவன் தான் தன்னையே நல்வழிப்படுத்தவேண்டும் என்று விழிப்புணர்வு கொண்டாலொழிய, அவனைத் திருத்த முயற்சிப்பது குதிரைக்கு நீர் பருக்கும் முயற்சி போன்றதாயமையும்.

மனிதர்மேல் நாம் கொண்டுள்ள வெறுப்பு, எமது இறைத்தோழமைக்குக் குறுக்கே நிற்கும் ஒரு சுவராக அமையக்கூடாது. மாறாக அவர்களது உணர்ச்சிகள், தேவைகள், சூழ்நிலைகளோடு இரண்

டறக் கலந்து மனித உறவை இறைத் தோழமைக்கு ஒரு பாலமாக உருவாக்க வேண்டும்.

ஏனெனில் நல்ல மனித உறவுகளில்தான் மனிதன் தெய்வமாகிறான். தப்பான உறவுகளால் மனிதன் மிருகமாகிறான். எம்மை இறைவனிடமிருந்து பிரிக்கவும், இறைவனோடு ஒன்றிக்கச் செய்யவும் மனித உறவிற்குச் சக்தியுண்டு. நல்ல மனித உறவுகளில் உற்சாகமும், ஒத்துழைப்பும், ஆபத்தில் உதவியும், தளர்ந்த வேளைகளில் திடமும், திக்கற்ற வேளைகளில் அக்கறையும் கிடைக்கின்றது. தப்பான மனித உறவுகளால் சந்தேகமும், மனத்தளர்வும், வெறுப்பும், கோபமும் ஏற்படுகின்றது. ஆனால் இந்த இருதுருவங்களும் எம்மை ஆக்கிக் கொண்டிருக்கின்றன என்பதையும் மறக்கமுடியாது.

எமது முன்னேற்றத்திற்குக் குறுக்கே நிற்பவர்களும், எதிர்ப்பவர்களும், வெறுப்பவர்களும், சாகச் சொல்பவர்களும்கூட எமது உளத் திடத்திற்கும் விவேகத்திற்கும் உறுதுணை அளிக்கிறார்கள். நண்பர்களின் தோழமையில் ஏற்படாத புதிய புதிய விழிப்புணர்ச்சிகள் எம்மை எதிர்ப்பவர்களால் ஏற்படுவதும் உண்டு. மனிதனிலே மனிதனைக் காண முடியாமல் இருக்கையில் மனிதனில் எப்படி இறைவனைக் காண்பது என்னும் வெறுப்பு நிலை தளர்ந்து, மனித உறவுகளில் இறைத்தோழமையின் சாயலைக் காண வேண்டியதன் முக்கியத்துவம் வெளியாகிறது. வெறுப்பு நிலையிலிருந்து விடுதலையாகி, எம்மை நேசிப்பவர்களும், நாம் நேசிப்பவர்களும், எம்மை வாழ அழைப்பவர்களும், நாம் அழைப்பவர்களும்,

எம்மைப் புரிந்து கொள்பவர்களும், நாம் புரிந்து கொள்பவர்களும் பெருகிவர வாழ்வு வளம் நிறைந்ததாக மாறும்.

## போலி உறவில் புகலிடமா?

மனிதர்களை அப்படியே இறைத்திட்டத்திற்கமைய ஏற்றுக்கொள்வது தப்பியோடும் ஒரு போலி அமைதிதானே என்று என் மனம் கேட்டது. அதிகார வெறி, ஆதிக்க வெறி, சாதிவெறி, சுரண்டல், அநீதி, கபடு, வஞ்சகம் போன்ற அக்கிரமங்களைக் கண்டும் கண்களை மூடி, காதுகளை அடைத்து, வாய் பேசாது, ஊமைகளாய்க் குருடர்களாய்ச் செவிடர்களாய் வாழ்வது எத்துணை போலி வாழ்வு! ஆனல் அது ஒரு போலி வாழ்வாகவும் தோன்றவில்லை. கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, வெளிப்படையான ஒரு அநீதியின் சவாலிலே, அதை எதிர்க்க ஏற்படும் சக்தியை நாமே கண்டு வியப்புறக் கூடியதாக இருக்கும். அதற்குத் தன்னலங் கருதாத தூய கருத்தும், ஆழ்ந்த சிந்தனையும், செபமும், விவேகமும் அத்தியாவசியம். அத்தகைய ஒரு ஆன்ம சக்தி, குறுக்கிடும் அநீதியை எதிர்த்து வெற்றி காண்பது திண்ணம். அத்தகைய சக்தியால் தான் ''சிலர் அரசுகளை எதிர்த்து வென்றனர் ; மாற்றார் படைகளை முறியடித்தனர் ; ஏளனத்துக்கும் சாட்டையடிகளுக்கும் ஆளாயினர்; விலங்கிடப்பட்டுச் சிறையில் வாடினர் ; கல்லால் எறியப்பட்டனர் ; வாளால் அறுக்கப்பட்டனர் ; பட்டயத்துக்கு இரையாயினர் ; வறுமையுற்று வாடினர் ; துன்புறுத்தப் பட்டனர் ; குகையிலும், நிலப் பொந்

துகளிலும், பாலை வெளிகளிலும், மலைகளிலும் அலைந்தனர்.''

அடிமைத் தளையை அறுத்தெறிந்தது ஆபிரகாம் லிங்கனின் ஆன்ம சக்தி ;

அகிம்சையைக் கையாண்டு அந்நியன் ஆட்சியை அறுத்தெறிந்தது காந்தியின் ஆன்ம சக்தி ;

கறுத்தவனைக் காட்டுமிராண்டியெனக் கருதி, கருவியாக்கி வாழ்ந்த வெள்ளைக்காரரை எதிர்த்தது மாட்டின் லூதர்கிங்கின் ஆன்மசக்தி;

ஏரோதின் துர் நடத்தையைக் கண்டித்து, சிரசு போகும்வரை உண்மைக்காக வாதாடியது அருளப்பரின் ஆன்மசக்தி;

சமுதாய ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறிந்து, சமத்துவமான சமுதாயப் பாதைக்கு வித்திடச் செய்தது கார்ல் மாக்சின் ஆன்மசக்தி;

முதலாளித்துவப் போக்கை முறியடித்து,தொழிலாளித்துவத்தை உருவாக்க, கைத்தொழிற் புரட்சியைக் கடைப்பிடித்தது மாஓவின் ஆன்ம சக்தி;

சொந்த நாட்டையும் வீட்டையும் விட்டு, ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்து, இரக்கம் என்னும் புண்ணியத்தை உலகறியச் செய்தது திரேசாளின் ஆன்ம சக்தி;

மனிதனைத் துன்பத்திலிருந்து விடுவிக்கச் சபதம் பூண்டு, ராச பதவியைத் துறந்து, வனவாசம் எய்தச் செய்தது புத்தரின் ஆன்ம சக்தி;

சமயத் துர்ப்பிரயோகங்களைச் சுட்டிக்காட்டி, தூயதோர் சமய நெறியை உருவாக்க வேண்

டியதன் அவசியத்தை எடுத்துணர்த்தியது மார்ட்டின் லூதரின் ஆன்ம சக்தி;

சிலுவையிலறைந்து, நெஞ்சைக் குத்திப் பிளந்து கொலை செய்த கொடிய பாதகரைக் கூட மனமுவந்து மன்னித்து, உலகத்தை மீட்டெடுத்தது இறைமகன் யேசுவின் ஆன்ம சக்தி......!!

உள்ளத்தில் உருவாகும் தூய ஆசைகள், தூய இலட்சியங்கள் வெற்றியாவது திண்ணம். அத்தகைய ஒரு ஆன்ம சக்திக்கு எந்த எதிர்ச்சக்தியும் இணை நிற்க முடியாது. மானிட சரித்திரத்தில், விடுதலை இயக்கங்களில் ஈடுபட்ட பெருந்தலைவர்கள் அனைவரும் ஆன்ம சக்தி நிறைந்தவர்களாய் இருந்தார்கள் என்பது வெள்ளிடைமலை,

இந்த ஆன்ம சக்தி, இக்கட்டான கடினமான சூழ்நிலைகளில்கூட, வன்முறை வன்செயலற்ற சுமுகமான சமாதான வழிவகைகளைக் கையாளும் வலிமை கொண்டது.

## துன்பமே, உன்னை இரு கரம் விரித்து வரவேற்கிறேன் !

துன்பம் என்பது மனிதனால் விளக்க முடியாத மறை பொருளாயிருந்தபோதும், தற்காலிகமாகத் தாங்க முடியாத சுமையாக இருந்தபோதும், அது எவ்வாறு மனிதனின் வாழ்க்கையில் பயன் படுகிறது என்பதை எண்ணுகையில்தான் அதன் ஆழம் புரிகிறது.

இறைப்பிரசன்னத்தின் ஒளியிலே வாழ்க்கைச் சவாலும், துன்பமும் எனக்கோர் புதிய கண்ணோட்டத்தைக் கொடுத்தது. அந்தக் கண்ணோட்டத்திலே உதித்ததோர் ஒப்புமை. உப்பளத்திலே உப்பு கும்பம் கும்பமாக குவிக்கப்பட்டிருந்தது. அது கசப்புத்தன்மையின் கும்பம். குவிக்கப்பட்டிருக்கும் உப்பு எனக்குக் கருத்தற்றது. கசப்புக் கும்பம் எனக்குத் தேவைப்படாதது. ஆனால் சமையலறையில் இருக்கும் சிறு போத்தல் உப்பு எனக்குக் கருத்துள்ளது. அதிலிருந்து சிறிதளவு எடுத்து, உணவோடு சேர்க்கும்போது அது என் உணவிற்கு உருசியளிக்கிறது உப்பின்றி உணவு "பச்சத் தண்ணி" உணவாகிறது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று பழமொழியாகக் கூறும் அளவிற்கு அதன் முக்கியத்துவம் ஒரு சூழ்நிலையிலே தென்படுகிறது. அவ்வாறேதான் துன்பமும். துன்பம் உப்பைப்போல் கும்பமாக வெளிநிலையில் இல்லை. அது நல்ல மரத்திலே உருவாகும் ஒரு நச்சு வேரைப் போன்றதாகும். அது வாழ்க்கையில் ஓர் அனுபவம். அதன் விளைவுகளை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கண்டுணரக் கூடியதாய் இருக்கிறது. ஏனெனில் இன்பமே விதி; துன்பம் விதிவிலக்கு. எம்வாழ்வு முழுவதும் உப்புக் கும்பத்தைப்போல் துன்பக் கும்பமாக இருக்குமாயின் அதைத் தாங்கவே முடியாது. அப்படி எவர் வாழ்வையும் இறைவன் படைக்கவில்லை. தனது வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கும் எவரும், தான் கண்ணீர் சிந்திய நாட்களைக் கைவிரல் கொண்டு எண்ணலாம் என்பதை உணருவர்.

ஆனால் சிரித்து அக்களித்த நாட்களை அப்படி எண்ணிவிட முடியாது. சிறிதளவு உப்பு எவ்வாறு உணவிற்கு உருசி கொடுக்கிறதோ அவ்வாறே துன் பமும் வாழ்க்கைச் சக்கரத்திற்கு உறுதி கொடுத்து உருட்டிக் கொண்டிருக்கிறது. உப்பில்லாப் பண் டத்தைப் போன்று துன்பம் கலவாத வாழ்வு கருத்தற்ற, சுவையற்ற, 'பச்சத் தண்ணி' வாழ் வாகிக் குப்பையிலே கொட்ட நேரிடும். ஏனெ னில் துன்பம் கலவாத இன்பமும், கவலையில்லாத வாழ்வும், சாவையறியாத வீடும் இவ்வுலகில் இல்லை.

## சிரித்தாலும் கண்ணீர் வரும்

இதயத்தைப் பிளந்து, நெஞ்சைப் பதற வைத்து, வாழ்வை நிலைகலக்கிச் செல்லும் சஞ்சலத் தின் அழகு அளவிட முடியாதது. சிரிப்பிலே கொட் டும் கண்ணீரை விட, கவலையில் ஒழுகும் கண்ணீர்த் துளிகள் ஆழமும் தூய்மையும் நிறைந்தனவாகும்.

இன்பம் வருங்கால் இறுமாப்படைந்து, தற் பெருமை கொண்டு, மற்றவனை மதியாது நடக்கி றோம். மற்றவனின் துன்பத்திற்குக் கசிவற்ற இதயத் தோடு வாழ்கிறோம். சுமக்க முடியாத துன்பச் சுமைகளை மற்றவர்கள் மேல் சுமத்திவிட்டு அதை ஒரு விரலாலும் தொட்டுப் பாராமல் இருக்கிறோம். இந்த நிலைகளிலும் பார்க்க, துன்பத்தால் புடமிடப் பட்டு, தாழ்த்தப்பட்டு, நசுக்கப்பட்டு, மக்களால் இகழப்பட்டு வாழ்வது உன்னதமான நிலையாகும். ஆகவே துன்பத்தை நீக்குவது மட்டும் வாழ்வின் இலட்சியமல்ல. துன்பத்தின் மத்தியிலும் "இவரே என் நேசகுமாரன். இவர் மேல் பூரண பிரியமா யிருக்கிறோம்" என்று இறைவன், அசரீரி வாக்குக் கொடுத்து உறுதுணையாக நிற்பதாகக் கிறிஸ்தவம் போதிக்கின்றது.

## கண்ணீருக்காக மனிதன் படைக்கப்பட்டானு ?

சிற்பிக்குள்ளே உறங்கிக்கிடக்கும் முத்தைப் போன்று இன்பம் எல்லோர் உள்ளங்களிலும் உறங்கிக் கிடக்கின்றது. துன்பம் என்ற வெறுப் புணர்ச்சியிலிருந்து உள்ளம் தளர்த்தப்பட்டு, என் உள்ளத்தினுள்ளே இன்பம் உறங்கிக் கிடக்கின்றது என்ற விழிப்புணர்வே அமைதிக்கு அடிப்படையா கும். எவர் வாழ்விலும் துன்பம் உண்டு. ஆனுல் துன்பத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்ற மனப்பண்பு இல்லாத காரணத்தினுற்ருன் அநே கமானேர் வாழ்க்கையில் வாதைப்படுகின்றனர். ''இறைவா நான் துன்பப்பட்டுக் கொண்டே வாழ வரமருள் வாய்'' என்று வேண்டுகிருள் புனித திரே சம்மாள். துன்பத்திற்குப் பழக்கப்பட்ட, பண்பட்ட இதயத்தின் செபம் அது.

சிலருடைய வாழ்வில் குறுக்கிட்ட துன்பம், அவர்களை இறைவனிடம் ஈர்க்கச் செய்திருக்கிற தாக சுயசரிதைகளில் வாசிக்கிறேம். ஒரு ஆன்மா வைத் தன்பால் இழுப்பதற்கு, இறைவன் கையா ளும் வழிகளில் துன்பமும் ஒன்ருகத் தோன்றுகிறது. மனிதன் தன் வாழ்வில் அணிந்திருக்கும் போலி அணிகலன்களின் கெடுபிடியிலிருந்து தன்னை விடு வித்து, வெறுமையாக, நிர்வாணமாக, பலமற்றவ ஞக நின்று கொண்டிருக்கும் நிலையை உருவாக்கு வது தான் துன்பத்தின் பங்காகும்.

மனிதன் தன் பலத்தில் கொண்டுள்ள நம்பிக் கையையும், பணம், பட்டம், பதவி, காணி, பூமி

போன்ற போலி அணிகலன்களின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையையும் முற்றுகக் கைவிட வேண்டும். கைவிட்டபின், இறைவன் என்ற சக்தியில் பூரண நம்பிக்கை வைக்கும் வரை அவனுக்கு விடுதலை கிடையாது. இறைவனைத் தன் உள்ளத்தில் அனுபவிக்கவும் மாட்டான். மனிதன் தற்பெருமை கொண்டு வாழும்போது, இறைவனைப் பற்றிச் சிந்திக்கப் போவதில்லை. ஆனல் தற்பெருமை தளர்ந்து. வெறுமையாக நின்று கொண்டிருக்கையில் இறைவனின் வல்லமையை உணருவான்.

> ''நான் என் குறைபாடுகளைக் காணும் பொழுது, நெருக்கடியிலிருக்கும் போது, இடுக்கண்ணுறும் போது கிறிஸ்துவை முன்னிட்டு நான் மன நிறைவோடு இருக்கின்றேன். ஏனெனில் வலுவின்றி இருக்கும் போதுதான் நான் வலிமை மிக்கவனுயிருக்கிறேன்.'' புனித சின்னப்பர்.

யேசுவினுடைய வாழ்வு தான் துன்பம் என்ற மறைபொருளுக்கு வெளிச்சம் தருவதாக இருக்கின்றது. ''பிதாவே ஏன் என்னைக் கைநெகிழ்த்தீர்'' என்று அபயக் குரல் எழுப்பும் அளவிற்கு கிறிஸ்து சோதிக்கப்பட்டார். ''உம்முடைய சித்தமானுல் இந்தத் துன்பக்கலம் என்னைவிட்டு நீங்கட்டும்'' என்று இரந்து கேட்டும் இறைவன் அவரது ஆறுதலுக்கு வராதது, ஒரு மறைபொருளாகத்தான் தோன்றுகிறது.

நாமும் எமது துன்ப வேளைகளில் ஆலயத்திற்கு ஓடிப் போகின்றோம். இறைவனைக் கூக்கிரலிட்டு அழைக்கின்றோம். ''இதற்கோர் முடிவு தரவேண்

டும்'' என்று கெஞ்சிக் கேட்கின்றோம். ஆனால் எது வித முடிவும் உடனடியாக வருவதில்லை. இறைவனும் தனது திருமுகத்தை எம்மிடமிருந்து மறைத்து விட்டார் போன்று எப்பக்கமும் இருள் மயமாகத் தோன்றுவதுண்டு. இறைவன் என்னோடு கோபித்து விட்டாரோ என்ற சோதனையும் ஏற்படலாம். ஆனால் அந்தச் சூழ்நிலையிலும் ''இறைவா உன் சித்தம் போல் ஆகட்டும்'' என்று கூறுவதுதான் உள்ளத்து அமைதிக்கு ஒரேயொரு வழியாகும்.

> ''கண்ணுக்குப் புலப்படாதது, காதுக்கு எட்டாதது, மனித உள்ளத்தில் ஏழாதது, கடவுள் தனக்கு அன்பு செய்பவர்களுக்காக ஏற்பாடு செய்தது'' வேதாகமம்.

> ''கடவுளிடம் அன்பு கூர்பவர்களிடம் அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, கடவுளின் ஆவி அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார்.''

துன்பத்தைப் பொறுமையோடு சகிப்பது மட்டும் போதாது. பிறருக்குத் துன்பம் வருவியாமலிருப்பது மட்டும் போதாது. பிறர் துன்பத்தை நீக்க எம்மால் இயன்றவையத்தனையும் செய்ய வேண்டும். துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித சுபாவம். அதை நீக்குதல் தெய்வீகமாகும். பிறர் துன்பத்தை எம்மேல் தாங்கிக் கொள்வதைப் போல் இன்பம் எதுவுமேயில்லை. பிள்ளையின் துன்பத்தை தாயல்லவா தாங்குகிறாள். அவ்வாறே பிறர் துன்பத்தை நாம் எம்மேல் தாங்கிக் கொள்ள வேண்டும். எமது துன்பங்களைப் பிறரோடு பகிர்ந்து

கொள்ளும் போது அதன் கொடூரம் பன்மடங்கு குறைந்து விடுகின்றதல்லவா? ஆகவே நாமும் பிறர் துன்பங்களை எம்மேல் சுமந்து அவர்களது சுமையைக் குறைக்க முயற்சி எடுக்க வேண்டும்.

## அரசியல் அமைதி

அமைதித் துளியின் பின்னணியில் அரசியல் அமைதியைப் புறக்கணிக்க முடியாது. "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க அரசியலமைதி மனிதனின் உள்ளத்து அமைதியோடு பின்னிப்பிணைந்து கிடக்கின்றது. "தனி மனிதனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினையே அழித்திடுவோம்" என்று பாரதி சவால் விட்டபொழுது ஒவ்வொரு மனிதனின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டினார்.

மனிதன் ஒரு வாக்காளன்; ஆனால் அரசியலில் அவன் ஒரு இறைவனாகக் கருதப்படுகிறான். ஒரு நாட்டின் அரசியலில் அமைதி நிலவும் பொழுது கலை, கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம் போன்றன தானாகவே வளர்கின்றன. அரசியலில் அமைதி நிலவும் பொழுது மக்களிடையே பரந்த மனப்பான்மை நிலவும். பகிர்ந்து வாழும் உயர் நோக்குப் பெருகும். கூடிவாழும் ஒவ்வொரு மனிதனின் உரிமைகளை மதித்து நடக்கும் முக்கியத்துவம் பெருகும். வேற்றுமை கலந்த ஒன்றித்த வாழ்வு மலரும். மனிதத்தன்மையோடு ஒட்டிய சகோதரத்துவ மனப்பான்மை வளரும்.

பாரபட்சமற்ற நீதியை நிலைநாட்டுவது ஒரு அரசின் கடமையாகும். ''எந்த அரசாவது மனித உரிமைகளை ஏற்காமலோ அல்லது அவமதித்தோ நடந்தால் அது தன் கடமையினின்றும் பிறழ்கிறது. அன்றியும் அதன் ஆணைகள் நீதியின் ஆற்றல் அற்றவைகள்'' (அவனியில் அமைதி John XXIII )

எந்தப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டேனும் ஓரினத்தின் உரிமைகளை, அது எவ்வளவு சிறுபான்மையாக இருந்த போதும், மறுப்பது அன்றேல் அலட்சியம் செய்வது அந்த இனத்தின் விடுதலைத் தாகத்தையும் புரட்சிகரமான உணர்ச்சிகளையும் தூண்டி விடுவதாகும். அன்று பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கெடுபிடியிலிருந்து விடுதலைபெற விரும்பினர் அமெரிக்கர். அப்பொழுது அமெரிக்கர் சிறுபான்மையாக இருந்த போதும், சுதந்திரப் போர் தொடுத்து பிரித்தானிய சாம்ராஜ்யத்தையே முறியடித்து, ஓர் வல்லரசை உருவாக்கியது நாம் கண்ட சரித்திர நிகழ்ச்சியாகும்.

சிறிய ஓர் இனத்தை அடக்குமுறைக் கொள்கைகளால் நசுக்கியாள எத்தனித்த பெரும்பான்மையினம், அச்சிறிய இனத்தாலேயே அடிமைப் படுத்தப் பட்டதற்கு இது ஒரு சான்றாகும்.

தனிப்பட்ட மொழி, கலை, கல்வி, கலாச்சாரம், சமயாசாரம் போன்றன இல்லாத எந்தவொரு இனமும் இவ்வுலகில் இல்லை. அவை மனிதனுடைய தசையோடு தசையாக எலும்போடு எலும்பாக ஊறிப்போனவைகள். அவற்றைத் தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவது அவ்வினத்தையே அழிப்பதைப் போன்றதாகும்.

''ஓர் அரசியல் முறை எல்லோருடைய பொது நலனுக்காகவும் ஏற்பட்டுள்ளதால் தனி மனிதனுடைய நலத்தையோ அல்லது ஒரு சிலருடைய நலத்தையோ மட்டும் தேடல் தவறு. ஆனால் நீதி நேர்மையோடு கவனிக்கும் போது சில சமயங்களில் ஆட்சியாளர்கள் சமுதாயத்தில் வளமற்று வாழும் மக்கள் மேல் தனிக்கவனம் செலுத்த வேண்டும். காரணம் இத்தகையோர் தங்களின் உரிமைகளை வற்புறுத்திக் காக்க முடியா நிலையிலுள்ளார்கள். (அ. அமைதி).

''சிறுபான்மை மக்களது வலுவையும் எண்ணிக்கையையும் குறைக்க எவ்விதத்திலும் முற்படுவது நீதிக்கு முற்றிலும் ஒவ்வாதது. இக்குழுக்களை வேரோடு அழிக்கத் திட்டமிட்டால் அது மிகப் பெரிய அநீதியாகும்.'' ''சிறுபான்மை இனத்தைச் சார்ந்த குடிகளின் மொழிவளர்ச்சி, இயற்கைத் திறன்கள், பழக்கவழக்கங்கள், பொருளாதார முன்னேற்றம், முயற்சி போன்றவற்றை அரசியல் அதிகாரிகள் வளர்க்க முயலவேண்டும். இவ்விதம் முயல்வதால் வியத்தகு முறையில் நீதி கடைப் பிடிக்கப் படுகின்றது'' (அவனியில் அமைதி).

மொழி, இனம், நாடு, சாதி போன்ற அடிப் படையில் பாரபட்சம் காட்டுவது ஒரு நாட்டின் அமைதியான சூழ்நிலைக்குப் பங்கம் விளைவிப்பதாக அமையும். பாரபட்சத்தைப் பயன்படுத்தி நசுக்குவது, சுரண்டுவது, அடக்குமுறைக் கொள்கைகளைக் கையாளுவது இனக் கலவரங்களை உண்டு பண்ணும். உணர்ச்சிவசமான நிலைகளுக்கும், அற்ப,

கீழ்த்தரமான, சில்லறைப் பிளவுகளுக்கும் அடிமையாகி நாட்டின் அமைதியைக் குலைப்பது எவ்வளவு பரிதாபமான காட்சியாக அமைகிறது.

''அண்மைக் காலத்தில் விஞ்ஞானத் தொழில் துறை முன்னேற்றம், மக்களின் மனத்திலே ஆழ்ந்த மாற்றத்தை ஏற்படுத்தியதால் அனைவரும் இணைந்து உழைக்கும் ஒரே குடும்பமாக வாழவும் நேர்ந்துள்ளது'' (அவனியில் அமைதி). பிரிவினைகள், பிளவுகள், வித்தியாசங்கள் இயற்கையிலேயே உள்ளனவாகும். பிளவுகள் சில சமயங்களில் போட்டிமனப்பான்மையை பெருகச் செய்து, முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்தும் சக்தி கொண்டன என்பதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். ஆனால் பிளவுகள் மற்றவனின் முனேற்றத்திற்குக் குறுக்கே எவ்விடயத்திலும் நிற்கக் கூடாது.

''ஒவ்வொருவனும் தனது நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ப அடிப்படைக் கல்வி பெறவும், தொழிற்றுறைப் பயிற்சியும், வேலைக்குரிய பயிற்சி பெறவும் உரிமையுண்டு. ஒவ்வொருவரின் திறமைக்குத் தக உயர்கல்வி பெற எல்லாவித முயற்சியும் எடுக்கவேண்டும்'' (அவனியில் அமைதி)

''அரசியல் அதிகாரிகள் ஒரு புறம் குடிகளது உரிமைகளைக் கவனமாகக் காத்துச் சேர்க்க வேண்டும். இன்னொரு புறம் அவற்றை முன்னேறச் செய்ய வேண்டும். ஒரு சில தனி மனிதர்களுக்கோ அல்லது சமூகக் குழுக்களுக்கோ தனிச் சலுகைகள் காட்டி ஆதரிக்கும் போது அவர்கள் தனிப்பட்ட முறையில் நலன்களைப் பெறுகிறார்கள். இத்தகைய நிலைக்கு

இடம் கொடுக்கவே கூடாது. அரசாங்கம் உரிமைகளைக் காக்க முயல்வதால் எந்த வகையிலும் தடையாயிருக்கக் கூடாது. ஏனெனில் பின் வரும் உண்மை எப்போதும் காக்கப்பட வேண்டும்: பொருளாதாரத் துறையில் நாடு எத்தகைய பெரிய அலுவலைச் செய்தாலும் தனி மனித சுதந்திரத்தையும் அவர்களது சுய தொடக்க ஆற்றலையும் குறைக்கும்படி எதையும் செய்யக் கூடாது. மாறாக ஒவ்வொருவருடைய முக்கியமான சொந்த உரிமைகளைப் பேணிக் காப்பதன் மூலம் முடிந்தவரை சுதந்திரத்தை முன்னேற்றி வளர்க்க முயலவேண்டும். சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் குடிமக்கள் தங்களது உரிமைகளைக் கையாண்டு கடமைகளை எளிதில் நிறைவேற்ற அரசாங்கம் பல வழிவகைகளையும் எடுத்துத் தூண்டி நடத்த வேண்டும்'' (அவனியில் அமைதி.)

மொழியால், கலாச்சாரத்தால், இனத்தால் வேறுபாடு இருந்த போதும் எல்லோரும் மனிதர்கள்தானே. எல்லோரையும் வாழ விட்டால்தான் என்ன?

## சமுதாய அமைதி

அமைதித் துளியின் பின்னணியில் சமுதாய அமைதியையும் புறக்கணிக்க முடியாது. தனி மனிதனின் உள்ளத்து அமைதிக்கு சமூகச் சூழல் உறுதுணையாய் அமைந்தால் அமைதி நிலவும். மீனினம் வாழ வேண்டுமென்றால் அதற்கு நீர் தேவைப்படுவது போன்று மனிதனுக்கும் தேவைப்படும் பொருத்தமான சூழ்நிலைகள் பலவுண்டு.

இலங்கை வாழ் மக்களிடையே தாங்க முடியாத துன்பத்தையும் துயரத்தையும் பார்ப்போருக்கு மனவேதனையும் உண்டாக்கும் சூழலில் வாழ்ந்து கொண்டிருப்போர் எத்தனை எத்தனை ?

''இயல்பாகவே ஒரு சிலர் உயர்ந்தவர், பிறர் தாழ்ந்தவர் என்பது உண்மையன்று. எல்லா மனிதர்களும் இயல்பாகவே சம மாண்புடையவர்கள். எனவே எந்த சமுதாயமும் இயல்பிலேயே உயர்ந்தது அன்று. வேறெதுவும் இயல்பிலேயே தாழ்ந்ததும் அன்று. சமுதாயங்கள் அனைத்தும் மனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளதால் அவைகளுக்கும் இயல்பாகச் சம மாண்புண்டு.'' (அவனியில் அமைதி)

சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட மக்களது வாழ்க்கையை நாங்கள் ஆராயும் பொழுது அவர்கள் பல பிற்போக்குச் சக்திகளில் சிக்குண்டு எவ்வாறு உயரலாம் என்று தத்தளிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ''அவர்கள் முன்னேறுகிறார்கள் இல்லை'' என்று மேலெழுந்த வாரியாக அவர்கள் மேல் பழி சுமத்துவதும் தப்பாகத் தோன்றுகின்றது. அவர்களுக்கு

இலட்சிய வழிகாட்டிகள் குறைவு;
தங்கள் மேல் அனுதாபப்படுவது அதிகம்;
மனத்திடம் குறைவு;
தீய பழக்கங்கள் அதிகம்;
கட்டுப்பாடு குறைவு;
அடிச்சுவட்டைப் பின்பற்ற உயர் பதவியிலோ உயர் நிலையிலோ இருப்போர் மிகச் சொற்பம்;

பொருளாதார வசதி மிகக் குறைவு;
விடுதலை உணர்ச்சி குறைவு;
விவசாயக் காணிகள் மிகச் சொற்பம்;
சோம்பேறித்தனம்
குடிப்பழக்கம்
சிக்கனமின்மை
இனப்பெருக்கம்
நோய்
அறியாமை

இனப் பிளவுகள் — போன்ற பிற்போக்குச் சக்திகளில் சிக்குண்டு கிடக்கிறார்கள். சிந்திக்கத் தெரியாத, தங்களுக்குள்ளே பிரிந்து நிற்கும் மக்களை அடிமைப்படுத்துவது மிகச் சுலபமல்லவா? இத்தகைய பிற்போக்கான நெருக்கடிகளிற் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் அவர்களை உயர்ந்தோர், பணக்காரர், முதலாளி வர்க்கத்தினர் விட்டுவிட மாட்டார்கள். அவர்களை அடிமைப்படுத்தி, கருவியாகப் பயன்படுத்தி, சுரண்டி உறிஞ்சிக் குடித்து தம் வயிற்றை நிரப்புவார்கள். ஆகவே அவர்கள் முன்னேறுவது எப்படி? அவர்கள் தாங்களாகவே விடுதலையடையும் அறிகுறிகள் சிறிதளவும் இல்லை. ஏனெனில் பழங்கால சமுதாய அமைப்புக்குள் அகப்பட்டு கூண்டுக் கிளிகளாக மாறிவிட்டார்கள். பணம் படைத்தோர், சமூகத் தொண்டர், அறிவாளிகள், அரசியல் தலைவர்கள் அவர்களது உதவிக்கு வந்து மனிதப் பண்போடு அவர்களுக்கு நீதி வழங்காவிட்டால், சமூக நலத் திட்டங்களால் அவர்கள் முன்னேற வழி வகுக்காவிட்டால் அவர்கள் கதி என்ன ஆகுமோ?

''தனி மக்கள் அறிவிலும், புண்ணியத்திலும், திறமையிலும், செல்வத்திலும் பெரிதும் ஏற்றத் தாழ்வுடையவர்களாய் உள்ளார்கள் என்பது நாம் அனுபவத்தால் அறிந்ததே. இவ்வேற்றத்தாழ்வு களைக் காரணமாகக் கொண்டு ஒருவன் தன் அய லார் மேல் அநியாயமாய் அதிகாரம் செலுத்தக் கூடாது. இது போன்றே, பண்பாடு, பொருளா தார முன்னேற்றம் போன்றவற்றில் அரசியல் சமு தாயங்கள் வெவ்வேறு நிலைகளை அடைந்திருக்க லாம். ஒரு சிலர் இவற்றில் உயர்நிலையெய்தியுள்ள தால் நியாயத்திற்கு மாறாக நடந்து கொள்ளக் கூடாது''. (அவனியில் அமைதி)

''சிறுபான்மை இனத்தைச் சார்ந்த குடிகளின் மொழி வளர்ச்சி, இயற்கைத் திறமைகள், பழக்க வழக்கங்கள், பொருளாதார முன்னேற்றம், முயற்சி போன்றவற்றை அரசியல் அதிகாரிகள் வளர்க்க முயலவேண்டும். இவ்விதம் முயல்வதால் வியத்தகு முறையில் நீதி கடைப்பிடிக்கப் படுகின்றது.'' (அவனியில் அமைதி)

சிறுபான்மை மக்களுக்குப் புரட்சி செய்ய முடியாது. ஆள்பலமோ, தலைமை வகிக்கக்கூடிய திறமையோ, பணமோ, பதவியோ அவர்களிடம் இல்லை. பாராளுமன்றத்தில் அவர்களது அபிலா சைகளை, தேவைகளை எடுத்துச் சொல்லப் பிரதி நிதிகள் இல்லை. அரசியல் வாதிகள் பசப்புமொழி பேசி தொடர்ந்து ஏமாற்றுவது சாதாரணம். அப் படியில்லையென்றால் ஒரு சில சலுகைகளைக் காட்டி அவர்களை மதி மயக்குவதும் உண்டு. தாங்கள்

பெறவேண்டிவது சலுகைகள் அல்ல. மற்ற மனி தர்களுக்கு உள்ளது போன்ற உரிமை என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் உணருவதாகத் தோன்ற வில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களின் உழைப்பால் உயர்ந்த ஒரு சிலர், அவர்கள் தாழ் நிலையிலேயே இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். ஏன் இந்தத் தீய மனநிலையோ யாமறியோம். அவர்களும் மனி தர்கள் தானே. அவர்களையும் வாழவிட்டால் தான் என்ன?

## சமய அமைதி

உள்ளத்திற்குக் குளிர்ந்த சிந்தனைகளை ஊட்டி யதில் எந்தச் சமயமும் தோல்வி அடைந்ததில்லை. உண்மை இலட்சியத்தைச் சூழ்நிலைக்கேற்றவாறு காட்டி நின்றன சமயங்கள் என்பதையும் மறக்க முடியாது. சமயச் சிந்தனைகள் உடைந்த உள்ளங் களுக்கு ஓர் ஆறுதல்; தளர்ச்சியுற்ற உள்ளங்களுக்கு ஒரு உற்சாகம்; மந்தமுற்ற உள்ளங்களுக்கு ஒரு தூண்டுதல்.

சமயம் என்பது மனிதனுடைய இயற்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்று. அது மனிதனுடைய வாழ்வு என்றே சொல்லாம். மனிதன் தன் வாழ் விற்குக் கருத்தையும், புது மெருகையும் காண்பது சமயக் கண்ணோட்டத்தில் தான். மனிதனது ஆன் மீக தாகத்திற்கு அருமருந்தாக இருப்பது சமயம். ஏனெனில் வரையறையற்ற, மாற்றமற்ற, நிலையான ஒன்றைத்தான் உள்ளம் எந்நேரமும் தேடுகிறது.

மனித உள்ளம் நிலையற்ற வாழ்விலிருந்து விடுபடத் தவியாய்த் தவிக்கின்றது. ஆகவே சமயம் மனிதனை மேலெழுப்பி அவனது மகிமையை, இறைச் சாயலை, ஆவிக்குரிய வாழ்வை உணரச் செய்கிறது. இதிலேதான் மனிதனின் உண்மையான விடுதலை தங்கியுள்ளது. சிறுமைத்தனமான சில்லறை அமைப்புகளிலிருந்தும், வேறுபாடுகள், பிளவுகள், பிரிவுகளிலிருந்தும் மனிதனை விடுவிப்பதற்கு உறுதுணையாய் இருப்பது சமயமாகும். மனிதன் தன் மகிமையை தானே உணரச் செய்வதுதான் சமயத்தின் பங்காகும்.

மனித சூழலிலிருந்து சமயத்தைப் புறம்பாக்க முடியாது. அத்தகைய ஒரு சமயத்தைக் கற்பனை செய்யவும் முடியாது. காலத்தால், சரித்திரத்தால், கலாச்சாரத்தால், உலக நிகழ்ச்சிகளால், சமூக அமைப்புகளால், அரசியலால் கட்டுண்ட ஒரு சூழ்நிலையில்தான் சமயத்தையும் சூழ்நிலைப்படுத்தவேண்டும். ஆகவே உலக நிகழ்ச்சிகள், அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்புகள் பிழையாகப் போகும்போது அவற்றை மாற்றி அமைக்கக்கூடிய புதுக் கருத்தையூட்டி மனிதனின் இறைச் சாயலை உணரச் செய்வதுதான் சமயத்தின் முக்கிய பங்காகும்.

அநீதிகள், பாரபட்சங்கள், சுரண்டல்கள், அடக்குமுறைகள் நிலவும் போது குமுறியெழும் உள்ளங்களை அன்பு, அகிம்சை, அருள்வாழ்வு போன்ற குளிர்ந்த சிந்தனைகளால் சாந்தப்படுத்துவது மட்டும் போதாது. மாறாக, அவைகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் காட்டித் தலைமைத்துவம் தாங்குவது சமய வழிகாட்டிகளின் முக்கிய

பங்காகும். விடுதலை அளிக்கவேண்டிய ஒரு அமைப்பு அடிமைத்தனத்தை வளர்ப்பதாக அமையக்கூடாது. இந்தச் சூழலில்தான் கார்ல் மாக்ஸ், நியெட்ஸ் போன்றவர்கள் சமயத்தை வெறுத்தார்கள். புரட்சியால் ஏற்படும் மறுமலர்ச்சிப் போக்கை மந்தப் படுத்தும் சக்திதான் சமயம் என்று சவால் விட்டார்கள். சமயங்களின் முதலாளித்துவச் சார்பையும், அளவுக்கு மீறிய பாரம்பரிய மாமூலைக் கொள்கைகளையும் அறவே எதிர்த்தார்கள். கள்ள வாணிகம் செய்பவனும், சுரண்டி வாழ்பவனும்கூட ஆலயத்தினுள் சென்று உள்ளச் சாந்தி பெறும் ஒரு போலிச் சமய நெறியை மனிதன் உருவாக்குவதை அனுமதிக்க மறுத்தார்கள்.

மன்னிப்பு, அன்பு, அகிம்சை, அருள் வாழ்வு போன்றன சமயங்களின் உயர்ந்த இலட்சியங்கள் என்பதை மறுப்பார் எவருமில்லை. ஆனால் குறுக்கு வழிகளுக்கும், தப்பியோடும் போலி மனநிலைகளுக்கும் சமயத்தைத் தப்பாகப் பயன்படுத்துவது சமய இலட்சியத்தைக் கெடுப்பதாக அமையும்.

சமயங்கள், கால ஓட்டத்திலே, தங்கள் உயர்ந்த இலட்சியங்களிலிருந்து தவறி சமயாசாரப் பாரம்பரியத்திற்கும், குருட்டு மனப்பான்மைக்கும், சட்டம், சம்பிரதாயம், நற்பெயர் போன்ற போலி அமைப்புகளுக்கும் உட்பட்டன என்பதற்குச் சரித்திரம் சான்று பகருகின்றது.

சமய வழிபாட்டுக்கும், சமய நெறிக்கும் இடையே பெரும் பள்ளத்தாக்கு உண்டு. சமய நெறியையும், வழிபாட்டையும் ஒன்றோடொன்று கலந்து

விட்டதால்தான் சமயங்கள் தங்கள் நற்பெயரை இழக்கும் கட்டங்கள் ஏற்பட்டன. சமய வழிபாடு சமய நெறியின் ஒரு சிறு பகுதியே. வைற்கெற் என்ற அறிஞர் கூறுகிருர்: ''ஒருவன் தான் தனிமையில் செய்வது தான் சமயம்.'' சட்டத்திற்கு ஒளித்து மறைந்து மனிதன் தவறைச் செய்து வாழலாம். ஆனுல் அவனது மனச் சாட்சியைக் கட்டுப்படுத்த யார் வருவார்? அங்குதான் சமயம் தன் பங்கை நிறைவேற்றுகிறது.

பழங்கால விசுவாசத்தையும், நடைமுறைகளையும், ஒழுங்குகளையும் குழப்பக்கூடாது என்பது ஓரளவு சரியானது. எனினும் இவைகள் மனிதனை அடிமையாக்காமல், புதிய பாதையைக் காட்டிக் கொடுப்பதாக இருந்தால் இன்னும் வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

## வாழ விடுவீர்களா?

''நான் இன்னெருவனின் தோளில் ஏறி இருந்து கொண்டு அவனை நசுக்கிறேன். அவன் என்னைத் தூக்கிச் செல்ல வேண்டும் என்றும் அவனைப் பலாத்காரப் படுத்துகிறேன். நான் அவனுக்காக வருந்துகிறேன் என்று மற்றவர்களை எண்ண வைக்கவேண்டும் என்றும் முயற்சி செய்கிறேன். அவனது தோளிலிருந்து இறங்குவதைத் தவிர என்ன வழியைக் கையாண்டாகிலும் அவனது பாரத்தைக் குறைக்க வேண்டும் என்று முயற்சிக்கிறேன்'' என்று லீயோ ரோல்ஸ்டாய் எழுதிய சிறு கவிதையைக் கீழே காணலாம்.

I sit on a man's back choking him
And making him carry me
And yet
Assure myself and others
That I am sorry for him
And wish
To lighten his load
By all possible means
Except
By getting off his back.

லீயோ ரோள்ஸ்டாய் எழுதிய இச்சிறு கவிதை எம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஒருவனது தோளிலே அமர்ந்து கொண்டு அவனது தோளிலிருந்து இறங்காமல் அவனுக்காக அனுதாபப்படுவது எவ்வளவு சுலபமான காரியம். ஒரு சில சமுதாய அமைப்புகள் ஏழைகளுக்கு, வாழ வழியற்றவர்களுக்கு, ஒரு கோப்பை கஞ்சிக்கு மாடாக உழைக்கும் ஏழைத் தொழிலாள வர்க்கத்தினருக்கு இதையே செய்து வருகின்றன. சாதி, சமயம், மொழி, நிறம் போன்ற அமைப்புகளும் ஒரு சிலருக்கு அவ்வாறே செய்கின்றன. துவேசங்களைப் பயன் படுத்தி ஒரு சிலரை நசுக்குவதும் சுரண்டுவதும் அநீதியாகும். கள்ள வாணிகம், கறுப்புப் பணம், பதுக்கல், சுரண்டல் போன்ற அநியாய முறைகளால் ஏழைகளைச் சுரண்டி வாழ்வதும், தனியார்துறை உற்பத்தித் தாபனங்களில் தொழிலாளிகளை வருத்தித் துன்புறுத்துவதும், மனித உரிமைகளை மறுத்து தொளிலாளிகளைப் பயன்படுத்துவதும் நாம் கண்கூடாகக் காணும் அநீதியான செயல்களாகும்.

* * *

விடுதலை என்பது ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலிருந்து பிறக்க வேண்டும் என்று கூறுவதும் தவறு. சமுதாய அமைப்பை மாற்றியமைத்தல் தான் விடுதலைக்கு ஒரே ஒரு வழி என்று கூறுவதும் தவறு. இரண்டும் மாற்றப்பட வேண்டும். சமுதாய அமைப்புகளால் நசுக்கப்படும் ஏழைகள் உயிர்த்தெழ வேண்டுமென்றால் சமுதாய அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். சமுதாய அமைப்பு எவ்விதத்திலும் நசுக்காத ஒரு சூழலில், உள்ளம் விடுதலையாக்கப்பட வேண்டும்.

நீதி மறுக்கப்படும் ஏழைகள் எத்தனை ?
நீதி பெறாத ஏழைகள் எத்தனை ?

உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறாத தொழிலாளிகள் எத்தனை ?

தமது உழைப்பின் பயனை அனுபவிக்க முடியாத ஏழைகள் எத்தனை ?

பணம் படைத்தவர்களால் அடிமைகளாக்கப்பட்டவர்கள் எத்தனை ?

தமது குற்றம் ஏதும் இல்லாமல் வாழ்க்கை வசதிகளை இழந்து தவிப்போர் எத்தனை ?

வயலிலே நெல்லுக்கு இறைக்கப்படும் நீர் புல்லுக்கும் பொசிவதுண்டு. அவ்வாறே எம் நாட்டுச் செல்வமும் மாடாக உழைப்போருக்குப் பொசியுதே தவிர அவர்களுக்கு அது முற்றிலும் பயன்படுவதில்லை. உழைக்காத கரங்களில் ஏதோ வழியில் அது போய்ச் சிக்கி விடுகிறது. இது நாம் காணும் முதலாளித்துவ அமைப்பு. உழைப்பவர்கள் மனித

உரிமைகளை இழந்தவர்கள் ஆகி வருகிறார்கள். அவர்களும் மனிதர்கள்தானே ! அவர்களையும் வாழ விட்டால்தான் என்ன? நீதியைப் பயன் படுத்தினால்தான் என்ன ?

## மேகங்களே நீதியைப் பொழிக !

''ஒரு நகரில் இரு மனிதர் இருந்தனர். ஒருவன் செல்வந்தன், மற்றவன் ஏழை. செல்வந்தனுக்கு ஆடு மாடுகள் மிகுதியாக இருந்தன. ஏழை மனிதனுக்கோ விலைக்கு வாங்கி வளர்த்த ஓர் ஆட்டுக் குட்டியைத் தவிர வேறொன்றுமில்லை. அது அவனோடும் அவன் பிள்ளைகளோடும் வீட்டில் வளர்ந்து, அவன் அப்பத்தைத் தின்று அவனது கிண்ணத்தில் குடித்து அவன் மடியில் தூங்கி அவனுக்கு ஒரு மகனைப் போலவே இருந்து வந்தது. ஆனால் செல்வந்தனிடம் வழிப்போக்கன் ஒருவன் வந்தபோது, அவன் தன்னிடம் வந்த அவனுக்கு விருந்து செய்யத் தன் சொந்த ஆடுகளில் ஒன்றைப் பிடிக்க மனமின்றி அந்த ஏழையின் ஆட்டைப் பிடித்து அவனுக்குச் சமயல் செய்தான்.'' இது கிறிஸ்தவ வேதாகமத்தில் கூறப்படும் உள்ளத்தைத் தொடும் ஒரு சிந்தனைத் துணுக்காகும்.

சாதியால், சமயத்தால், மொழியால், இனத்தால்......... ஏற்படும் அதிகாரத்தையும், பணத்தையும், பலத்தையும் பயன்படுத்தித் தாழ்நிலையில் வாழும் ஏழைகளை, தாழ்த்தப்பட்டவர்களை உறிஞ்சிக் குடிக்கும் ஒரு சிலரை நாம் கண்கூடா

க் காண்கிறோமல்லவா? தமது குற்றமின்றி நாளுக்கு நாளாகத் தாழ்நிலைக்கு தள்ளப்படும் ஏழைகள் தான் எத்தனை !!

''செல்வர்கள் இல்லத்தில் சீராட்டும் பிள்ளைக்கு
பொன்வண்ணக் கிண்ணத்தில் பால்கஞ்சி
கண்ணீர் உப்பிட்டு காவேரி நீரிட்டு
கலையங்கள் ஆடுது சோறின்றி
இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி''

நசுக்கப்படும் ஏழைகள்தானு மேலும் மேலும் நசுக் கப்படவேண்டும்? வசதி படைத்தவர்கள் அவர்களை வாழவிட்டால்தான் என்ன? அவர்களும் வாழ வழி வகுத்தால்தான் என்ன?

## நீதியே நீ மறைகிருயா?

நீதி என்பது சமுதாயத்தில் வேரற்ற கிளைக ளாகவும், சமயத்தில் கிளைகளற்ற வேர்களாகவும் காட்சியளிக்கின்றது. சமுதாயத்தில் நீதி வேரற்ற கிளைகளாகக் காட்சியளிக்கின்றது, ஏனெனில் நீதியின் அடித்தளமான இறைவனின் வழிகாட்ட லில் உருவாக்கப்படாத அறிகுறிகள் காணப்படுவ திஞல்தான். அரசர்களோ, அரசாங்கங்களோ, தத் தமது சுயநலக் கருத்துக்களுக்காக நீதியைப் புரட்டி உருட்டி உருவாக்கக்கூடாது. அரசர்களோடும் அரசாங்கங்களோடும் தெய்வீகம் கலக்கும்போது தான் உண்மையான வழிகாட்டல் பிறக்கும்.

"ஆலோசனையும், நடுநீதியும் என்னுடையவை; விவேகமும் வலிமையும் என்னுடையதே. அரசர் ஆள்வதும், சட்டங்கள் செய்வோர் நியாயமானவைகளைக் கற்பிப்பதும் என்னாலே தான். என்னாலேயே தலைவர்கள் கட்டளை யிட்டும் வல்லவர்கள் நீதியை விதைத்தும் வருகிறார்கள்"

(பழ. 8/14-16)

ஆழ்ந்த இறைப்பற்றிலும், இறையுணர்விலும், இறைப்பயத்திலும், பொதுநலமனப்பான்மையிலும் கட்டி எழுப்பப்படாத நீதி வேரற்ற கிளைகளே. தெய்வ பயத்தில் கட்டி எழுப்பப்படாத நீதி அதி காரத்தையே இலட்சியமாகக் கொண்டிருக்கும். மக்கள்மேல் அதிகாரம் செலுத்துவதையே விருப்ப மாகக் கொண்டிருக்கும்.

"இறைவன் அநீதியைக் கண்டு சகிக்காதவர், பாரபட்சம் காட்டாதவர், கைலஞ்சம் வாங் காதவர், அநீதி செய்வோனைத் தண்டிப்பவர்"

"நீதி அவருக்கு அரைக்கச்சை. உண்மை அவ ருக்கு இடைக்கச்சை"

இந்த அத்திவாரத்திலே நீதி கட்டி எழுப்பப்பட வேண்டும். மாறாக, உணர்ச்சி வசமான நிலைகளுக்கும், பாரபட்சமான மனநிலைகளுக்கும், அதிகார ஆசைக் கும் அடிமையாகிய நீதி அமைதியைக் கொண்டு வராது. மாறாக போட்டியையும், பூசல்களையும், கல கங்களையும் உருவாக்கி அமைதியைக் குலைக்கும்.

சமய ரீதியில் நீதி என்பது கிளைகளற்ற வேர்களாகக் காட்சியளிக்கிறது. ஏனெனில், நீதியின் அடித்தளம் இறைவனின் பாரபட்சமற்ற நீதியில் கட்டப்பட வேண்டும், பிறரை வஞ்சித்தல் கூடாது என்று எழுத்திலும் வாய்ப் பேச்சிலும் மட்டும் சமயரீதியில் சொல்லப் படுவதினுல்தான். குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில், வெளிப்படையான ஒரு அநீதியின் சவாலிலே அதை எதிர்க்க சமயத் தலைவர்கள் தயங்குவதாகக் காட்சியளிக்கின்றது. அப்படியாயின் சமயக் கோட்பாடுகளினுல் மட்டும் என்ன பயன்?

ஆகவே, சமய ரீதியில் நீதி என்பது பயன் படுத்தப் படாவிடில் அது புதைத்து வைக்கப் பட்டிருக்கும் ஓர் கூர்மையான ஆயுதத்திற்கு ஒப்பாகும். பயன்படவேண்டிய ஒன்று தனது ஆற்றலை, திறமையை இழந்து ஒளிந்து கிடக்கின்றது. அதனுல் யாருக்கு என்ன பயன்?

---

''உங்கள் சிந்தனைக்கு''

> ''மனித சமூகம் உயர்ந்ததோர் ஆன்மீகப் பொருளாகக் கருதப்பட வேண்டும்''

*

> அயலானின் துன்ப நிலையில் நாம் கொள்ளும் இதயக் கசிவு அவனது விடுதலைக்கு முதற்படியாகும்.

*

அநீதியைப் பற்றிய விழிப்புணர்வு நீதிக்கு முன்னோடியாகும்.

*

''நீதி எங்கு மறைக்கப்படுகிறதோ, அங்கே அமைதியும் மறைந்துவிடும்''

*

''நசுக்கிப் புதைக்கப்பட்ட நீதி ஓர் நாள் உயிர்த்தெழும்''

*

''இறைவனுக்குப் பணிதல் அரசோச்சுதலாகும்''

*

''நீதியற்ற அரசர்கள் கொள்ளைக் கூட்டங்களேயன்றி வேறல்ல''

*

''கட்டுப்பாடு எதுவுமில்லாச் சக்திதான் அதிகாரம் என்று கருதக்கூடாது. அதிகாரம் என்பது பகுத்தறிவின்படி ஆணையிடும் ஒரு சக்தி''

*

மற்றவன் தன்னிலும் பார்க்க உயர்ந்துவிடுவான் என்ற பொறாமையுணர்வே நீதியை மறுக்கின்றது. அவன் முன்னேறாமல் போய்விடுவானோ என்ற அச்சமல்ல.

*

மக்கள் அனேகமாக உணர்ச்சிவசமான சிறு விடயங்களுக்கு அடிமையாகி பெரிய நீதியை மறுக்கிறார்கள். நீதி என்பது உணர்ச்சி வசப்படும் ஒரு நிலையல்ல. மற்றவனின் உரிமையை மனித உரிமையென மதிப்பதாகும்.